Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவள்ளுவர் ஆத்திசூடி

சேயோன்

முரளி பதிப்பகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Foundatio

urukul K

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय, हरिद्वार

वर्ग संख्या·········   आगत संख्या···············

पुस्तक—वितरण की तिथि नीचे अंकित है। इस तिथि सहित २० वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए। अन्यथा १० पैसे के हिसाब से विलम्ब-दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

D-7325
Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவள்ளுவர் ஆத்திசூடி

DONATION
पुस्तकालय
7325

சேயோன்

"FORWARDED FREE OF COST
AND WITH THE COMPLIMENTS OF
THE Dept OF Edn. Govt. OF INDIA
NEW DELHI"

முரளி பதிப்பகம்

T–6, மகாலக்ஷ்மி
80–82, நாட்டு சுப்பராய முதலி தெரு
மயிலாப்பூர், சென்னை–600 004

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHICAL DATA

1.	Title of the book	:	'THIRUVALLUVAR ATTHICHOODI'
2.	Subject	:	Compilation of aphorisms from Thirukkural
3.	Author	:	SEYONE
4.	Name and occupation of the Author	:	N. MURUGAN, M.A., B.Sc., B.Ed., A.M.A., P.D.J. Programme Executive All India Radio, Madras
5.	Language	:	Tamil
6.	Edition	:	First
7.	Date ol Publication	:	December, 1990
8.	Copy Right Holder	:	Author
9.	Paper Used	:	11.6 k. g., D/cr., White Printing
10.	Size of the Book	:	18.5×2.5 cms
11.	Printing Point used	:	12 Point
12.	No. of Pages	:	87 Pages
13.	No. of Copies	:	1,000 Copies
14.	Printer	:	Sri Parameswari Press, Madras-4
15.	Publisher (With full address)	:	M. Natarajan T-6, Mahalakshmi, 80-82, Nattu Subbaraya Mudali Street, Mylapore, Madras-4

PRICE : Rs. 12-00

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்த்துரை

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

'சேயோன்'— இனிய பெயர்; இன்பத் தமிழனுபவத் திற்கு ஒரு வாயில்! பழையோன்! பின்னைப் புதுமையும் சேயோனிடம் உண்டு. சேயோன் நல்லவர்; வல்லவர்; ஆண்டுக்கு ஒரு அணி தமிழன்னைக்குச் சூட்டும் தகையாளர்; தமிழர்; தமிழினைக் கற்பதற்கு நூல்களை வரிசையாகத் தருபவர். இவர் விரைந்து தொழிற்படுபவர்; எதையும் காலங் கருதிச் செய்பவர்.

திருக்குறளை விரைந்து கற்கவேண்டும்; மற்றவர் களையும் கற்கும்படிச் செய்யவேண்டும் என்று இவர் எண்ணினார். அதுவும் திருக்குறளைக் கற்பிக்க விரும்பி னார். ஏழு சீரை மூன்று சீராக்கினார். இல்லை, இல்லை! திருவள்ளுவரே மூன்று சீரிலேயே பொருள் அமைவு அமையுமாறு திருக்குறளை இயற்றியுள்ளார். ஆம்! வாழ்க்கையில் முதல் அடியிலேயே வெற்றி பெற்றால்தான் வெற்றி. அடுத்து வரும் அடியெல்லாம் முக்கால் அடிதானே! இந்த அமைப்பை உளந்தோயக் கற்கும் பழக்கமுடைய சேயோன் கண்டுணர்ந்தார். முதல் அடிகளை மட்டுமே தொகுத்து வள்ளுவர் ஆத்திசூடி என்று நமக்குத் தருகிறார்.

நல்ல முயற்சி! புதிய அணுகுமுறை! நமக்கு நிறைய காலம் மிஞ்சும்! சரிசரி! சேயோன் காலத்தைக் கருதியே 'திருவள்ளுவர் ஆத்திசூடி' தருகிறார். நாம் வேறு வாழ்த்துரையில் காலத்தைப் பாழடிக்கக் கூடாது அல்லவா? சேயோன் தரும் 'திருவள்ளுவர் ஆத்திசூடி' யைப் படிக்கத் தொடங்குங்கள்! வளர்க சேயோன் தமிழ்! வாழ்க!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்புரை

கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி

பூலோக சரஸ்வதி என்று பெருமையாக அன்று தொட்டு இன்றுவரை போற்றி வழிபட்டு வருகின்ற மூதாட்டி அவ்வைப்பிராட்டியார் அருளிய ஆத்திசூடி வெகுவாகப் பிரசித்தி பெற்றதாகும்.

இப்பொழுது நம்முடைய அருமை நண்பர் சேயோன் 'திருவள்ளுவர் ஆத்திசூடி' என்ற ஒரு தொகுப்பினை சிறு நூல் வடிவமாகக் கொண்டு வந்துள்ளார். இத்தகைய புதியதொரு எண்ணம் அவருக்குத் தோன்றியதே வியக்கத் தக்கதாகும்.

இந்தப் பெயரைப் படித்த உடனேயே திருவள்ளுவர் ஆத்திசூடி என்ற ஒரு நூலினையும் எழுதியிருக்கின்றார் என்பதாகப் பலர் நினைக்கலாம்.

அவ்வையாரும் திருவள்ளுவரும் ஒரே வயிற்றில் பிறந்த பிள்ளைகளில் இருவர் என்ற புராணக் கதை இன்னும் மறைந்து விடவில்லை. ஆதலால் அவ்வையார் போல் திருவள்ளுவரும் ஒரு 'ஆத்திசூடி' எழுதியிருக்கக் கூடாதா என்று சிந்திப்பது தவறாகாது.

திருவள்ளுவர் ஆத்திசூடி என்பதற்குப் பதிலாக திருக்குறள் ஆத்திசூடி என்று பெயர் வைத்திருக்கலாமே என்று நினைத்தேன். அவ்வையார் ஆத்திசூடியைப் படித்த உடனேயே அர்த்தம் விளங்கி விடுவதுபோல குறட்பா சீர்களின் பொருள் எளிமையாக விளங்கிவிடுமா என்பது சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

அறிஞர் சேயோன் செய்துள்ள இந்தப் படைப்பில் ஒரு பெரிய நன்மை உண்டு. குறட்பாக்களை மனனம் செய்வதற்கு இது ஒரு முன்னோடியாக இருக்கும். ஆதலால் இந்தப் படைப்பினைப் பெரிதாகப் பாராட்டு கிறேன். சேயோன் அவர்களை வாழ்த்துகிறேன்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்

'குறுகத் தறித்த குறள்' என்று புகழ்ந்தார் பழம் பெரும் புலவர் இடைக்காடர். அப்படியானால் ஏழு சீர்களை உடைய குறளை இன்னும் தறிக்க முடியுமோ என ஆயத் தொடங்கினார் சேயோன். தறிக்கவும் முடியும். தறித்தால் அது வைரத்தைத் துண்டாடியது போன்றே இருக்கும் எனக் கண்டார். பல காரட் எடையுள்ள வைரம் துண்டாடப்பட்ட பொழுது பல்வேறு புதிய கோணங்களில் ஒளிவிடக் காணலாம்.

ஏனோ இத்தகைய முயற்சியை யாரும் இதுவரை மேற்கொள்ளவில்லை. மரபுவழித் தமிழ் கற்றவர் புதிய சிந்தனைகளில் தம்மைச் செலுத்தினார் இல்லை. ஒரு காலத்தில் உடைக்க முடியாது என்று கருதி 'ஆட்டம்' என்று பெயரிட்டான் அணுவிற்கு. பல காலம் பல விஞ்ஞானிகள் அதனை ஏற்று மகிழ்ந்தனர். ஆனால் ஒரு விஞ்ஞானி உடைக்க முடியாத இறுதிக்கூறு என்பதையும் உடைக்கத் தொடங்கி எலக்ட்ரான், ப்ரோட்டான், பாஸிட்ரான், மீஸான் என ஓர் உலகத்தையே அதனுள் கண்டான்.

விஞ்ஞானம் கற்ற சேயோன் இதனைவிடச் சுருக்கினால் பொருட் சிறப்பு போய்விடும் என்று கருதப் பெற்ற ஏழு சீர்களைத் தறிக்கத் தொடங்கினார். நான்கு சீர்களில் மனித சமுதாயத்திற்கு என்றும் எங்கும் வேண்டப்படுவனவாகிய நீதிகள் குடிகொண்டிருப்பதைக் கண்டார்.

நீதிகளைக் கூறினாலும் எந்த நூலையும் நீதிநூல் என்று நம்மவர் கூறவில்லை. காரணம் நீதி என்ற உடன் மனதில் ஓர் எதிர்ப்புணர்ச்சி தோன்றிவிடும். இதனை அறிந்த அவ்வையார் நீதி என்று பெயரிடவில்லை. ஆனால் வேறு பெயரைத் தந்து மயங்க வைக்கவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லை. நூலின் முதற்பாடலின் முதல் சொல்லே நூலுக்கு பெயராயிற்று. மேலும் 'ஆத்திசூடி' என்ற பெயரில் நீதியின் மணம் இல்லை. படிக்கத் தொடங்கிய உடன் சிறு சிறு சொற்களால் ஆகிய இந் நீதிகள் நம்மை ஆட்கொள்கின்றன.

இந்த நுண்மையை நன்கு அறிந்த வள்ளுவர் பெருமானும் தான் கூறவந்த நீதிகளை நான்கு சீர்களில் கூறிவிட்டார். எஞ்சியுள்ள மூன்று சீர்களில் கூறப் பெற்ற கருத்தை— நீதியை உடன்பாடு அல்லது எதிர்மறை முகத்தான் காரணங் கூறி நிலைநிறுத்தப்பட்டன. இந்த நுணுக்கத்தை அறிந்த நண்பர் சேயோன் நான்கு சீர்களில் உள்ள நீதிகளை மட்டும் எடுத்துத்தர முற்பட்டதன் விளைவே இச் சிறு நூல்.

இனி 'திருவள்ளுவர் ஆத்திசூடி' என்று பெயர் வைத்தது முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துச் செல்வதாகும். அன்பர் சேயோன் தொகுத்த இந்த ஆத்திசூடி மிகப் பழைய குறளிலிருந்து தொகுக்கப் பெற்ற தாதலின் 'பழைய ஆத்திசூடி' எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அறம், அன்பு, அஞ்சாமை என்பவை இக்காலத்துக்கு மிகவும் தேவையாதலின், ஒவ்வொன்றைப் பற்றியும் மூன்று, நான்கு முறை எடுத்து வலியுறுத்தும் குறள் உண்மையிலேயே இப்புதிய அணுகுண்டு சகாப்தத் திற்கு மிகமிகத் தேவைப்படுதலின் புதுமையுடையதாய், முன்னைப் பழமைக்கும் பழையதாய், பின்னைப் புதுமைக் கும் புதியதாய் இருத்தலின் ஆசிரியர் பெயருடன் சேர்த்து 'திருவள்ளுவர் ஆத்திசூடி'— எனப் பெயரிட்டுள்ளார்.

வேறு எதையும் படிக்க நேரமில்லாதவர்கூட இந்த நூற்றுமுப்பத்து மூன்று தொடர்களை அடிக்கடி படித்தால் வாழ்வு செம்மைப்படும்— வளம்பெறும். அனைவரும் படித்தால் நாடே நலம் பெறும். ஆசிரியர் சேயோனுக்கு தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக் கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் என்றும் நின்று நிலவும் நீதி நூல் திருக்குறள். அதனைப் படிக்கப் படிக்கப் பல்வேறு சிந்தனைகள் முகிழ்க்கின்றன. அதன் சொல்லாட்சியும், சொற்றொடர் அமைப்பும், எடுத்துரைக்கும் உத்தியும் படிப்போரை ஈர்த்து இசைவிக்கும் திறத்தன; பல புதிய படைப்புக்களை உருவாக்கத் தூண்டுவன. அந்த வகையில் கருக்கொண்டு உருப்பெற்றதுதான் இந்த 'திருவள்ளுவர் ஆத்திசூடி'!

'காவியமும் ஓவியமும்'— என்ற எனது நூலில் ஒரு கட்டுரையாக உலாவந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றது இந்த திருவள்ளுவர் ஆத்திசூடி. பின்னர் பதினாறு பக்க அளவில் மூவாயிரம் படிகளாக உருவெடுத்துப் பல்லோரின் நெஞ்சங்களை நிறைத்தது. அனைவரின் வேண்டுகோளினால் தூண்டப்பட்டு, சொற் பொருளும், கருத்துரையும் வழங்குவது சாலச் சிறந்தது என நினைத்து உருவாக்கியதும் சிறு நூலாக வெளி வந்துள்ளது இந்த திருவள்ளுவர் ஆத்திசூடி.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய தவத்திரு. குன்றக்குடி அடிகளாருக்கும், சிறப்புரை நல்கிய திருக்குறளார் முனிசாமி அவர்களுக்கும் அணிந்துரை அளித்துதவிய பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்களுக்கும் யான் என்றும் நன்றியுடையன்.

இந்நூலின் முகப்போவியத்தைச் சிறப்புற வரைந் தளித்த ஓவியர் மாருதி அவர்களுக்கும் அழகுடன் அச்சிட்டளித்த அச்சுக்கலை வல்லுநர் திரு P. மணி அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரித்து.

எனது இலக்கிய ஆய்வுகளையும் படைப்பிலக்கியங் களையும் விரும்பி ஏற்றுப் படிக்கும் அனைவரும் இந்த 'திருவள்ளுவர் ஆத்திசூடி'யையும் ஏற்று மகிழ்வர் என நம்புகிறேன்.

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் மலர்ப்பாதங்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

—சேயோன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளே...

1. திருவள்ளுவர் ஆத்திசூடி — 9

2. திருவள்ளுவர் ஆத்திசூடி — 22
(மூலமும்— உரையும்)

3. ஔவையார் ஆத்திசூடி — 74

4. பாரதியார் புதிய ஆத்திசூடி — 79

5. பாரதிதாசனார் ஆத்திசூடி — 84

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவள்ளுவர் ஆத்திசூடி

வான்புகழ் வள்ளுவர் வழங்கிய திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் சிறப்பு மிகுந்த நீதிநூல். நீதிமொழிகள் உலகத்தின் பொது மொழி. இனம், நிறம், கடல், மலை, ஆறு, நாடு— இவற்றைக் கடந்து கற்றார்க்கும் கல்லார்க்கும் எல்லார்க்கும் பொதுவாய்ப் பயன்படுவது நீதிநூல். அது அறிவின் நல்வழிகளை, ஆற்றலின் செயல் திறன்களை விளக்கி உரைப்பதால் எந்த நாட்டிற்கும் தனி உரிமை உடைய தன்று. அனைத்து நாட்டினரும் மொழியினரும் போற்றிப் புகழும் பொது உரிமை உடையது. அத்தகைய நீதிமொழிகளை நிறைவாகக் கொண்டதுதான் திருக்குறள் !

> **"எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்**
> **இல்லாத எப்பொருளும் இல்லையால்— சொல்லால**
> **பரந்தபா வால்என் பயன்வள் ளுவனார்**
> **சுரந்தபா வையத் துணை"**

—மதுரைத் தமிழ்நாகனார்

பல்வகைக் கருத்துக்களைப் பாங்குடன் பகரும் பல்கலைக் களஞ்சியமாய்ப் பரிணமிக்கும் திருக்குறள், அவ்வையார் அருளிய 'ஆத்திசூடி' போல், பாரதியார் பாடிய 'புதிய ஆத்திசூடி' போல் அரிய பல கருத்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களை— நீதிமொழிகளை— நெறிமுறைகளை ஒரு சொற்றொடரிலேயே விளக்குவதைப் படித்துணரலாம்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் பாடியது திருக்குறள் என்னும் சிந்தனைப் பெட்டகம் ஒன்றுதான். அது அறநூலாக, பொருள் நூலாக, அரசியல் கூறும் ஆட்சித்துணை நூலாக, சட்ட நூலாக, வாழ்வியல் நூலாக, இன்ப நூலாகப் பல்வேறு வடிவங்களில் பலருக்கும் அவரவர்தம் நுகர்விற்கேற்பப் பயன்படும் மணமிகு மலராக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

மொழியின் எழுத்து வடிவத்தைப் படிக்கும் முன்பே கருத்தின் வடிவத்தை நெஞ்சில் பதிய வைக்கும் ஆற்றல் உடையது ஆத்திசூடி! மனிதனுக்கு முன்னேற்றப் பாதையைக் காட்டி, அந்தப் பாதையில் தடையின்றிச் செல்ல ஊக்கமும் உவப்பும் உற்சாகமும் ஊட்டும் திறம் படைத்தது ஆத்திசூடி! நூல், அளவில் சிறியதாகவும், மெல்லியதாகவும் இருந்தால் பயனில் உறுதியும் உரமும் கொண்டிருக்கும். அதுபோல் சிறிய சொற்றொடர் மூலம் அரிய பல நீதிமொழிகளை உணர்த்த வல்லது ஆத்திசூடி!

'ஆத்திசூடி'யை முதன்முதலில் இயற்றியவர் அவ்வையார்.

''ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்திஏத்தித் தொழுவோம் யாமே''

என்ற கடவுள் வாழ்த்துப் பாடலுடன் ஆத்திசூடியைத் தொடங்கியுள்ளார் அவ்வையார். ஆத்திசூடி எனத் தொடங்கப்படுவதால் இந்நூல் ஆத்திசூடி என்ற திருப் பெயரைப் பெற்றது என்பர் இலக்கிய ஆய்வாளர். அவ்வையார் அறிமுகப்படுத்திய ஆத்திசூடி இலக்கிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகை பலருடைய மனத்தையும் ஈர்த்து இசைவித்த தால், அதேபோல் பிற்காலக் கவிஞர்களும் ஆத்தி சூடியைப் பாடியுள்ளனர். ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடி புராணம் என்னும் நூல்களும் பிற்காலத்தில் எழுதப் பெற்றன.

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்

இதுபோன்று அவ்வையார் நூற்றெட்டுத் தொடர்களில் ஆத்திசூடி பாடியுள்ளார். நூற்றெட்டும் நீதிமொழிகளே! ஒரு சொற்றொடர் விளக்க நன்னெறிகளே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவ்வையாரைப் போன்று ஆத்திசூடி பாட விழைந்தார். அவ்வையார் அவரது காலத்திற்கேற்பப் பாடிய ஆத்திசூடி, தாம் வாழும் காலத்திற்குப் பொருந்தாது என்பதை உணர்ந் தார் மகாகவி. எனவே 'புதிய ஆத்திசூடி' எனும் பெயரில் பாடினார்.

அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
இளைத்தல் இகழ்ச்சி
ஈகை திறன்
உடலினை உறுதிசெய்
ஊண் மிக விரும்பு

இப்படி நூற்றுப் பத்துத் தொடர்களில் நீதிமொழிகளைக் கூறியுள்ளார் பாரதியார்! அவையனைத்தும் படித்துப் பயன்பெறத்தக்கன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரின் தாசன் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனும் 'ஆத்திசூடி' பாடியுள்ளார்.

அனைவரும் உறவினர்
ஆட்சியைப் பொதுமை செய்
இசைமொழி மேலதே
ஈதல் இன்பம்
உடைமை பொதுவே
ஊன்றுளம் ஊறும்

இவ்வாறு பாவேந்தர் பாரதிதாசனார் என்பத்துநான்கு தொடர்களில் நீதிமொழிகளைப் பாடி அதற்கு 'பாரதி தாசன் ஆத்திசூடி' எனப் பெயர் சூட்டினார். இது போன்று பிற்காலக் கவிஞர்களும் ஆத்திசூடி பாடி உள்ளனர்.

தண்டமிழ் மூதாட்டி அவ்வையார் அருளிய 'ஆத்திசூடி', பாட்டுக்கொரு புலவர் பாரதியார் பாடிய புதிய 'ஆத்திசூடி' பாவேந்தர் வழங்கிய 'பாரதிதாசன் ஆத்திசூடி'— இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது 'ஆத்திசூடி'— இலக்கிய வகையானது ஒரு சொற்றொடரில் நீதிக் கருத்தைச் சொல்ல வேண்டும்— எளிய நடையில் இருத்தல் வேண்டும்— அகர வரிசைப் படி அமைத்தல் வேண்டும். அவ்வையார் ஆத்திசூடி எனத் தொடங்கிப் பாடியதே அவரது நூலுக்குப் பெயராயிற்று— பின்னர் அதுவே புதியதோர் இலக்கிய வடிவத்திற்கு முதலாயிற்று. அவ்வையாரின் ஆத்திசூடி இளைஞர்களின் பிஞ்சுள்ளங்களைப் பெரிதும் ஈர்த்துள்ளன. நீதியைச் சொல்வதற்கு 'ஆத்திசூடி' அமைப்புதான் உகந்தது என்பதை நன்குணர்ந்தே, அவ்வையாரைத் தொடர்ந்து பாரதியாரும், பாரதி தாசனாரும் 'ஆத்திசூடி' பாடியுள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அற்றை நாள் தொடங்கி இற்றை நாள் வரை சீரோடும் சிறப்போடும்; எளிமையோடும் இனிமையோடும்; கற்றோரும் மற்றோரும் போற்றும் பொலிவுடனும்; வீதி தோறும் விளங்குவதும் முழங்குவதும் பொதுமறையும் தமிழ் மறையுமாய் ஒளிர்வது தெய்வப் புலவரின் திருக்குறள்! உலகின் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டு, உலகத்தார் அனைவரின் உள்ளத்திலும் நீங்கா இடம் பெற்று விளங்குவது திருக்குறள்! இதில் எண்ணற்ற நீதிக் கருத்துக்களைச் சிறப்பாகக் கூறியுள்ளார் திருவள்ளுவர். குறள் வெண்பாவில்— ஒன்றே முக்காலடியில் அளப்பரிய செய்திகளையும் சிந்தனைகளையும் பெய்து பாடினாலும், அக்குறளின் முதலடியிலோ அல்லது ஈற்றடியிலோ, ஒரு சொற்றொடர் நீதிகளை முழுமையாகச் சொல்லியுள்ளார் திருவள்ளுவர். அப்படியானால் அவற்றையெல்லாம் தொகுத்து, அகர வரிசைப்படுத்தி அமைத்தால், அதுவும் 'ஆத்திசூடி' இலக்கிய வகையாக மிளிருமே என்ற வேணவாவில் தொகுத்ததுதான் இந்த '**திருவள்ளுவர் ஆத்திசூடி**'!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவள்ளுவர் ஆத்திசூடி

1. அகர முதல எழுத்து எல்லாம் (1)
2. அகம் தூய்மை வாய்மையால் காணப்படும் (298)
3. அகம்நக நட்பது நட்பு (786)
4. அச்சம் உடையார்க்கு அரண் இல்லை (534)
5. அச்சமே கீழ்களது ஆசாரம் (1075)
6. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா (497)
7. அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு (882)
8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை (428)
9. அடக்கம் அமரருள் உய்க்கும் (121)
10. அந்தணர் என்போர் அறவோர் (30)
11. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் (241)
12. அருமை உடைத்தென்று அசாவாமைவேண்டும் 611
13. அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை (245)
14. அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம் (368)
15. அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக (711)
16. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் (659)
17. அழுக்கற்று அகன்றாரும் இல்லை (170)
18. அறத்தான் வருவதே இன்பம் (39)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19. அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை (32)
20. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை (49)
21. அறிவு அற்றம் காக்கும் கருவி (421)
22. அறிவு இன்மை இன்மையுள் இன்மை (841)
23. அறிவு உடையார் ஆவது அறிவார் (427)
24. அறிவு உடையார் எல்லாம் உடையார் (430)
25. அறைபறை அன்னர் கயவர் (1076)
26. அற்றம் மறைக்கும் பெருமை (980)
29. அற்றாரைத் தேறுதல் ஓம்புக (506)
28. அற்றால் அளவு அறிந்து உண்க (943)
29. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் (72)
30. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? (71)
31. அன்பின் வழியது உயிர் நிலை (80)
32. அன்பு ஈனும் ஆர்வம் உடைமை (74)
33. அன்று அறிவாம் என்னாது அறம் செய்க (36)
34. ஆற்றின் அளவு அறிந்து ஈக (477)
35. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் (225)
36. இடுக்கண் வருங்கால் நகுக (621)
37. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக (712)
38. இலன்என்று தீயவை செய்யற்க (205)
39. இன்பம் விழையான் வினைவிழைவான் (615)
40. இன்மையுள் இன்மை விருந்தொரால் (153)
41. ஈதல் இசைபட வாழ்தல் (231)
42. ஈர்ங்கை விதிரார் கயவர் (1077)
43. உடையர் எனப்படுவது ஊக்கம் (591)
44. உண்ணற்க கள்ளை (922)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

45. உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை (600)
46. உருவு கண்டு எள்ளாமை வேண்டும் (667)
47. உலகத்து இயற்கை அறிந்து செயல் (637)
48. உலகம் தழீஇயது ஒட்பம் (425)
49. உழுவார் உலகத்தார்க்கு ஆணி (1032)
50. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033)
51. உள்ளத்து அனையது உயர்வு (595)
52. உள்ளற்க உள்ளம் சிறுகுவ (798)
53. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் (596)
54. உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு (339)
55. எண்ணித் துணிக கருமம் (467)
56. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் (125)
57. எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் (470)
58 எற்றுஎன்று இரங்குவ செய்யற்க (655)
59. எனைத்தானும் நல்லவை கேட்க (416)
60. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் (214)
61. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் (131)
62. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை (137)
63. ஒன்றாக நல்லது கொல்லாமை (323)
64. கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் (575)
65. கண்ணுடையர் என்பவர் கற்றோர் (393)
66. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை (290)
67. கற்க கசடறக் கற்பவை (391)
68. கற்றனைத்து ஊறும் அறிவு (396)
69. கற்றிலன் ஆயினும்கேட்க (414)
70. குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் (954)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

71. குற்றமே அற்றம் தரும் பகை (434)
72. கெட்டார்க்கு நட்டார் இல் (1293)
73. கேடில் விழுச்செல்வம் கல்வி (400)
74. கைம்மாறு வேண்டா கடப்பாடு (211)
75. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் (597)
76. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் (411)
77. செயற்கரிய செய்வார் பெரியர் (26)
78. செயற்கரிய யாவுள நட்பின் ? (781)
79. செய்க பொருளை (759)
80. செய்தக்க அல்ல செயக் கெடும் (466)
81. செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை (656)
82. சொல்லற்க முன்னின்று பின்னோக்காச் சொல் (184)
83. சொல்லுக சொல்லில் பயனுடைய (200)
84. சொல்லுதல் யார்க்கும் எளிய (664)
85. சொற்கோட்டம் இல்லது செப்பம் (119)
86. தம்பொருள் என்ப தம்மக்கள் (63)
87. தன்னெஞ்சு அறிவது பொய்யற்க (293)
88. தன்னைத்தான் காக்கின் சினம் காக்க (305)
89. திறன் அறிந்து சொல்லுக சொல்லை (644)
90. துணைநலம் ஆக்கம் தரும் (651)
91. துன்பத்திற்கு யாரே துணையாவார் (1299)
92. தூங்கற்க தூங்காது செய்யும்வினை (672)
93. தேறற்க யாரையும் தேராது (509)
94. தோன்றில் புகழொடு தோன்றுக (236)
95. நகுதல் பொருட்டன்று நட்டல் (784)
96. நல்லாறு எனினும் கொளல்தீது (222)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

97. நல்லாற்றான் நாடி அருள் ஆள்க (242)
98. நன்றி மறப்பது நன்று அன்று (108)
99. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் (138)
100. நாடென்ப நாடா வளத்தன (739)
101. நீர் இன்று அமையாது உலகு (20)
102. நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் (706)
103. பண்புடையார் பட்டுண்டு உலகம் (996)
104. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் (482)
105. பரிந்து ஓம்பிக் காக்க ஒழுக்கம் (132)
106. பற்றுக பற்றற்றான் பற்றினை (350)
107. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (972)
108. பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு (984)
109. புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் (538)
110. பெண்ணிற் பெருந்தக்க யாவுள ? (54)
111. பெருக்கத்து வேண்டும் பணிதல் (963)
112. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை (533)
113. பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ் (156)
114. பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை (252)
115. பொய்யாமை அன்ன புகழ் இல்லை (296)
116. மக்களே போல்வர் கயவர் (1071)
117. மங்கலம் என்ப மனைமாட்சி (60)
118. மடியுடையார் மாணபயன் எய்தல் அறிது (606)
119. மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர் (997)
120. மருவுக மாசற்றார் கேண்மை (800)
121. மறந்தும் பிறன்கேடு சூழற்க (204)
122. மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (457)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

123. முகம்நக நட்பது நட்பு அன்று (786)
124. முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை (449)
125. முயற்சி திருவினை ஆக்கும் (616)
126. மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)
127. யாகாவார் ஆயினும் நா காக்க (127)
128. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் (240)
129. வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை (221)
130. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை (439)
131. வினைசெய்வான் கோடாமை கோடாதுலகு (500)
132. வினைத்திட்பம் வேண்டாரை வேண்டாதுலகு (670)
133. வேண்டற்க வெஃகியான் ஆக்கம் (177)

தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்த நீதி நூலாம் திருக்குறளின் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறட்பாக்களிலும் நீதி மொழிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் காணலாம். அவற்றில் குறிப்பாகவும் சிறப்பாகவும் நீதிக்கருத்துக்களை நேரடியாகச் சொல்லும் எளிய, இனிய, தெளிவான ஒரு சொற்றொடர் நீதிமொழிகளை வான்புகழ் வள்ளுவரின் மரபு போற்றி நூற்று முப்பத்து மூன்றாகத் தொகுத்துள்ளேன் இவை அனைத்தும் அவ்வையார் அளித்த ஆத்திசூடிபோல் அமைந்து நீதிகளைச் சொல்லுகின்றன. இவை காலங் கடந்து, மொழி கடந்து, எல்லை கடந்து அனைவருக்கும் ஏற்புடைய நீதி மலர்களாய் மணம் பரப்பி, நெஞ்சில் நீங்கா இடம் பெறுவன! நல்லது எது? தீயது எது?— எனப் பகுத்தறிய வழிகாட்டி நெறிப்படுத்துவன! அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதோடு, மனத்தைச் செம்மைப் படுத்தி நாளும் முன்னேற்றத் தூண்டுவன! இத்தகு சிறப்புக் களை எல்லாம் ஏந்திய இந்த நூற்று முப்பத்து மூன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீதிமொழிகளையும், அதன் கர்த்தாவின் திருப்பெயரால் **'திருவள்ளுவர் ஆத்திசூடி'** எனப் போற்றிப் புகழலா மல்லவா?

இது அறிவியல் யுகம். வேகமும் விறுவிறுப்புமுள்ள காலம். 'நிற்க எனக்கு நேரமில்லை— இனி நான் நீண்ட வழி தூரம் போகவேண்டும்' என ஒவ்வொருவரும் விரைந்து செல்லும் காலமிது. இத்தகு சூழலில் திருக்குறள் முழுமையும் படித்துணரும் அளவுக்கு அவகாசம் இல்லாதோர் தெய்வப்புலவர் திருவள்ளுவர் தெளிந்துரைத்த ஒரு சொற்றொடர் நீதிமொழிகளை— திருவள்ளுவர் ஆத்திசூடியாக அலங்கரிக்கும் அருள் நெறிகளை ஓதி உணர்ந்து வாழ்வில் வளமும் நலமும் பெறலாமே!

இந்தத் 'திருவள்ளுவர் ஆத்திசூடி'—யில் உள்ள ஒரு சொறறொடர் நீதிமொழிகளில் சில சொற்களுக்கு எளிதில் பொருள் விளங்குவது கடினம். பொருள் தெரியாமல் அதனைப் படிக்க முடியாது. ஒருவேளை முயன்று படித்தாலும் மனதில் நிற்காது. எதையும் அதன் உட்பொருள் உணர்ந்து படித்தால் தான் மனதில் இடம்பெறும். அதன் உண்மைப் பொருளும் விளங்கும்.

இறைவனைப் பாடும் பக்திப்பாடல்களைக் கூடப் பொருள் தெரியாது பாடக்கூடாது. அவ்வாறு பாடினால் அறியாமை நிறைந்த உள்ளத்தில் ஆண்டவன் குடிபுக மாட்டானாம். இது திருநாவுக்கரசரின் அருள்வாக்கு.

**'சொற்பாவும் பொருள்தெரிந்து தூங்காதார் மனத்திருளை
வாங்காதான் இறைவன்'**

எனவே அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் திருவள்ளுவர் ஆத்திசூடியின் நீதிமொழிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

7325

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒவ்வொன்றிற்கும் சொற்பொருளும், கருத்துரையும் எழுதியுள்ளேன். இவை உறுதியாகச் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் உரிய வகையில் பயனளிக்கும் என எண்ணுகிறேன்.

திருவள்ளுவர் ஆத்திசூடியைத் தெரிவதோடு, அவ்வை மூதாட்டி, மகாகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்— இவர்கள் வழங்கிய ஆத்திசூடிப் பாடல்களையும் அறியவேண்டும் என்பதற்காக நூலின் இறுதியில் அவற்றையும் தொகுத்துள்ளேன். நீதிமொழிகளின் நித்திலமாக விளங்கும் ஆத்திசூடியின் அமுத மொழிகள் அனைத்தும் அனைவரின் உள்ளத்தையும் ஈர்த்து இசைவிக்குமல்லவா ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"FORWARDED FREE OF COST
AND WITH THE COMPLIMENTS OF
THE Dept OF Edn. Govt. OF INDIA
NEW DELHI"

திருவள்ளுவர் ஆத்திசூடி

(மூலமும் — உரையும்)

1. அகர முதல எழுத்தெல்லாம் (1)

சொற்பொருள் :

எழுத்தெல்லாம் — உலகில் வழங்கி வரும் எல்லா மொழிகளும்
அகரம் — ஒலிவடிவமாகிய 'அ' எழுத்து
முதல — முதலாவதாகக் கொண்டவை

கருத்துரை :

உலகில் வழங்கி வரும் எல்லா மொழிகளும் ஒலிவடிவமாகிய அகர ஒலியினை முதலாவதாகக் கொண்டுள்ளன.

2. அகம் தூய்மை வாய்மையால் காணப்படும் (298)

சொற்பொருள் :

அகம் — மனம்
தூய்மை — சுத்தம்
வாய்மை — உண்மை
காணப்படும் — உண்டாக்கப்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

உடலின் உட்புறமாகிய மனதைச் சுத்தப்படுத்த உண்மையே பேச வேண்டும்.

3. அகம் நக நட்பது நட்பு (786)

சொற்பொருள் :

அகம் — உள்ளம்
நக — மகிழ்ச்சி அடையும் வண்ணம்
நட்பது — நட்புக் கொள்வது
நட்பு — நண்பன், உறவு.

கருத்துரை :

உள்ளம் மகிழ்ச்சி கொள்ளும் வண்ணம் மனம் விரும்பிப் பழகுவதே சிறந்த நட்பாகும்.

4. அச்சம் உடையார்க்கு அரண் இல்லை (534)

சொற்பொருள் :

அச்சம் — பயம்
உடையார்க்கு — உடையவர்களுக்கு
அரண் — பாதுகாப்பு

கருத்துரை :

எதனைக் கண்டும் பயப்படுகிறவர்களுக்குக் கோட்டை, காவல் முதலான பல பாதுகாப்புகள் இருந்தும் பயன் இல்லை. ஏனெனில் அவர்களது பயமே, அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கும்.

5. அச்சமே கீழ்களது ஆசாரம் (1075)

சொற்பொருள் :

அச்சமே — துன்பம் வருமென்ற பயமே
கீழ்களது — தீய குணமும், செயலும் கொண்டோர்
ஆசாரம் — இயல்பு, வழக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

தீய குணமும், செயலும் கொண்ட கீழ்மக்களின் இயல்பே பயம்தான்.

6. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா (497)

சொற்பொருள் :

அஞ்சாமை — பயமற்ற மன உறுதி
அல்லாமல் — இல்லாமல்
துணைவேண்டா — துணைவேண்டுவதில்லை.

கருத்துரை :

யாருக்கும் அவனவனுடைய பயமற்ற மன உறுதி தான் எடுத்த செயலை வெற்றியுடன் முடிப்பதற்குச் சிறந்த துணையாகும். அதைத் தவிர வேறு துணை வேண்டுவதில்லை.

7. அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு (882)

சொற்பொருள் :

அஞ்சுக — பயப்படுக
கேள்போல் — நண்பர்களைப் போல்
பகைவர் — விரோதிகள்
தொடர்பு — நட்பு

கருத்துரை :

நண்பர்களைப்போல் நடித்து உடனிருந்து கொண்டே கேடு செய்யும் பகைவர்களின் நட்புக்குப் பயப்படவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை (428)

சொற்பொருள் :

அஞ்சுவது — பயப்படுவது
அஞ்சாமை — பயப்படாமை
பேதைமை — முட்டாள்தனம்

கருத்துரை :

பயப்பட வேண்டியதற்குப் பயப்படாதிருத்தல் முட்டாள்தனமாகும்.

9. அடக்கம் அமரருள் உய்க்கும் (121)

சொற்பொருள் :

அடக்கம் — மனம், சொல், செயல் என்ற மூன்றினையும் கட்டுப்படுத்துவது
அமரருள் — தேவர்களுள்
உய்க்கும் — செலுத்தும், சேர்க்கும்

கருத்துரை :

மனம், சொல், செயல்— என்ற மூன்றினையும் கட்டுப்படுத்துவதாகிய அடக்கம் என்னும் நல்ல குணம், ஒருவனை ஞானபலமும், தெய்வத்தன்மையும் மிக்க தேவர்களோடு சேர்த்து வைக்கும் வலிமை உடையது.

10. அந்தணர் என்போர் அறவோர் (30)

சொற்பொருள் :

அந்தணர் — குணமும், ஒழுக்கமும் மிக்கவர்
என்போர் — என்று கூறப்படுவோர்
அறவோர் — பிற உயிர்களிடத்தில் அன்பும் அருளும் காட்டுவோர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

பிற உயிர்களிடத்தில் அன்பும் அருளும் காட்டி, குணமும், ஒழுக்கமும் மிக்கவராய் விளங்குபவர்களே அந்தணர்கள் ஆவர்.

11. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் (241)

சொற்பொருள் :

அருட்செல்வம்	—	எல்லா உயிர்களிடத்தும் கருணையோடு நடந்து கொள்ளும் குணமாகிய செல்வம்.
செல்வத்துள்	—	செல்வங்கள் பலவற்றிலும்
செல்வம்	—	சிறந்த செல்வம்

கருத்துரை :

எல்லா உயிர்களிடத்திலும் கருணையோடு நடந்து கொள்ளும் உயர்ந்த குணம்தான் அருட்செல்வம். அது செல்வங்கள் பலவற்றிலும் சிறந்த செல்வமாகும்.

12. அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் (611)

சொற்பொருள் :

அருமை	—	ஒரு செயல் செய்து முடிப்பதற்குக் கடினமானது என நினைத்தல்
உடைத்தென்று	—	உடையது என்று
அசாவாமை	—	மனம் சோர்வடையாது இருத்தல்
வேண்டும்	—	வேண்டியதாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

எந்தச் செயலையும் செய்து முடிப்பதற்குக் கடினமானது என நினைத்து, மனம் சோர்ந்து விட்டுவிடுதல் கூடாது. மாறாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடும் ஊக்கத்தோடும் செயல்பட வேண்டும்.

13. அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை (245)

சொற்பொருள் :—

அல்லல் — துன்பம்

அருள் ஆள்வார்க்கு — அருள் என்னும் உயர்ந்த குணத்தைக் கொண்டவர்களுக்கு

இல்லை — இல்லாதாகும்.

கருத்துரை :—

அருள் என்னும் மிக உயர்ந்த குணத்தைக் கொண்ட அருளாளர்களுக்கு எப்பொழுதும் துன்பம் இல்லை.

14. அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம் (368)

சொற்பொருள் :

அவா — ஆசை

இல்லார்க்கு — இல்லாதவர்களுக்கு

இல்லாகும் — இல்லாதாகும்

துன்பம் — துயர், தொல்லை

கருத்துரை :

ஆசைப்படுவது மனித இயல்பு. ஆனால் பேராசை கொண்டால் மிகுந்த துன்பம்தான். அத்தகைய பேராசை இல்லாதவர்களுக்கு ஒரு போதும் துன்பம் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15. அவை அறிந்து ஆராந்து சொல்லுக (711)

சொற்பொருள் :

அவை அறிந்து	—	ஒரு சபையில் உள்ளவர்களின் தரத்தை அறிந்து
ஆராய்ந்து	—	பேசவேண்டிய பொருள் குறித்து நன்கு ஆராய்ந்து
சொல்லுக	—	பேசவேண்டும்

கருத்துரை :

ஒரு சபையில் உள்ளவர்களின் தரத்தை அறிந்து, அதற்கேற்பப் பேசவேண்டிய பொருள் குறித்தும் நன்கு ஆராய்ந்து, சபையோர் விரும்பிக் கேட்கும் வண்ணம் பேசவேண்டும்.

16. அழக் கொண்ட எல்லாம் அழப்போம் (659)

சொற்பொருள் :

அழ	—	பிறர் அழுது, வருந்த
கொண்ட	—	தான் சேர்த்துக் கொண்ட
எல்லாம்	—	பொருள் அனைத்தும்
அழப்போம்	—	சேர்த்தவன் அழுது வருந்த அவனை விட்டுப் போய்விடும்

கருத்துரை :

பிறரைத் துன்பப்படுத்தி, அவர்கள் அழ. அழ அவர்களிடமிருந்து பறித்த செல்வமெல்லாம், சம்பாதித்தவனையே துன்பப்படும்படி அழச் செய்துவிட்டு, அவனையும் நீங்கிப் போய்விடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17. அழுக்கற்று அகன்றாரும் இல்லை (170)

சொற்பொருள் :

அழுக்கற்று — பொறாமையினைக் கொண்டு
அகன்றாரும் — செல்வம் பெருக்கியவர்களும்
இல்லை — இல்லையாகும்

கருத்துரை :

பொறாமைக் குணம் கொண்டு செல்வம் பெருக்கிய வர்கள் இல்லை. அதாவது பொறாமைக் குணத்தினால் நன்மை வராது. தீமை உண்டாகும் என்பது உறுதி.

18. அறத்தான் வருவதே இன்பம் (39)

சொற்பொருள் :

அறத்தான் — அறமாகிய நல்ல செயல்களைச் செய்வதனால்
வருவதே — கிடைக்கின்றதே
இன்பம் — உண்மையான மகிழ்வும், இன்பமும்.

கருத்துரை :

அறமாகிய நல்ல செயல்களைச் செய்வதால் உண்மையான மகிழ்ச்சியும் இன்பமும் கிடைக்கும்.

19. அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை (32)

சொற்பொருள் :

அறத்தின் — அறமாகிய நல்ல செயல்களைக் காட்டிலும்
ஊங்கு — மேலான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக்கமும் — செல்வமும்
இல்லை — இல்லாதாகும்

கருத்துரை :

அறமாகிய நல்ல செயல்களைக் காட்டிலும் மேலான செல்வம் இல்லை.

20. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை (49)

சொற்பொருள் :

அறன் — அறம்
எனப்பட்டதே — என்று சொல்லப்படுவதே
இல்வாழ்க்கை — இல்லறம்

கருத்துரை —

இல்வாழ்க்கைக்குரிய நல்ல நெறிகளில் வாழ்வதே சிறந்த அறமாகும்.

21. அறிவு அற்றம் காக்கும் கருவி (421)

சொற்பொருள் :

அறிவு — நல்லது எது, தீயது எது எனப் பகுத்தறியும் திறமை
அற்றம் — இறுதி, அழிவு
காக்கும் — காப்பாற்றும்

கருத்துரை :

அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றும் சிறந்த பாதுகாப்புக் கருவியே அறிவு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

22. அறிவுஇன்மை இன்மையுள் இன்மை (841)

சொற்பொருள் :

அறிவு இன்மை — அறிவில்லாமை
இன்மையுள் — இல்லாமை பலவற்றிலும்
இன்மை — இல்லாமை

கருத்துரை :

இல்லாமை பலவற்றிலும் மிகுந்த இல்லாமை அறிவில்லாமையே!

23. அறிவு உடையார் ஆவது அறிவார் (427)

சொற்பொருள் :

அறிவு உடையார் — அறிவு உள்ளவர்கள்
ஆவது — பின்னர் வர இருப்பதை
அறிவார் — முன்னரே அறிய வல்லவர்கள்.

கருத்துரை :

அறிவு உடையவர்கள், பின்னர் நிகழ இருப்பதை முன்னரே அறிந்துகொள்ளும் திறமை கொண்டவர்களாக இருப்பர்.

24. அறிவு உடையார் எல்லாம் உடையார் (430)

சொற்பொருள் :

அறிவு உடையார் — அறிவுள்ளவர்கள்
எல்லாம் — எல்லாவற்றையும்— அனைத்தையும்
உடையார் — உடையவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

அறிவுள்ளவர்கள் எல்லாவற்றையும் உடையவர் களாவர். ஏனெனில் அறிவு ஒன்று மட்டும் இருந்தால், மற்ற எல்லாச் செல்வங்களையும் எளிதில் பெற்று விடலாம்.

25. அறை பறை அன்னர் கயவர் (1076)

சொற்பொருள் :

அறை — அடிக்கப்படுகின்ற
பறை — பறையெனும் அறிவிப்பு ஒலி எழுப்பும் கருவி
அன்னர் — ஒப்பாவர்

கருத்துரை :

கயவர்கள் பறைசாற்றும் தமுக்குக்குச் சமமான வர்கள்.

26. அற்றம் மறைக்கும் பெருமை (980)

சொற்பொருள் : —

அற்றம் — பிறருடைய குற்றம்
மறைக்கும் — மறைத்துப் பேசும்
பெருமை — பெருமையுடைய பெரியோர்கள்

கருத்துரை : —

பெருமையுடையவர்கள், பிறருடைய குற்றத்தினை வெளிப்படுத்தாமல், அவர்களின் குணங்களையே பாராட்டுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

27. அற்றாரைத் தேறுதல் ஓம்புக 506

சொற்பொருள் : —

அற்றாரை	—	அன்பில்லாதவர்களை
தேறுதல்	—	நம்புதல்
ஓம்புக	—	விலக்குங்கள்

கருத்துரை : —

அன்பில்லாதவர்களை நம்பாதீர்கள்.

28. அற்றால் அளவறிந்து உண்க (943)

சொற்பொருள் :

அற்றால்	—	முன்பு உண்ட உணவு செரித்த பிறகு
அளவு	—	செரிக்கும் அளவு
அறிந்து	—	தெரிந்து
உண்க	—	சாப்பிடுக

கருத்துரை :

முன் சாப்பிட்ட உணவு நன்கு செரித்துவிட்டதா? என்பதைத் தெரிந்தபிறகு உண்ண வேண்டும்.

29. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் (72)

சொற்பொருள் :

அன்பிலார்	—	பிறரிடத்தில் அன்பு இல்லாதவர்கள்
எல்லாம்	—	எல்லாப் பொருள்களையும்
தமக்குரியர்	—	தங்களுக்கே உரிமையாக்கிக் கொள்வர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

பிறரிடத்தில் அன்பு பாராட்டிப் பழகாதவர்கள், எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாக்கிக் கொள்வர்.

30. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் (71)

சொற்பொரு :

அன்பிற்கும் — பிறரிடத்தில் செலுத்தும் அன்புக்கும்
உண்டோ — இருக்கின்றதோ
அடைக்கும் — அடைத்து வைக்கின்ற
தாழ் — தாழ்ப்பாள்

கருத்துரை :

அன்பு என்னும் உணர்வை அடைத்துவைக்கத் தாழ்ப்பாளும் உண்டோ? இல்லை.

31. அன்பின் வழியது உயிர்நிலை (80)

சொற்பொருள் :

அன்பின் — அன்பினைக் கொண்டு
வழியது — அதன் வழியில் நிற்பதே
உயிர்நிலை — உயிர் இருக்கும் உடம்பு

கருத்துரை :

அன்புடையவர்களாக நடந்து கொள்ளுகிறவர்களே உயிருள்ளவர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

32. அன்பு ஈனும் ஆர்வம் உடைமை (74)

சொற்பொருள் :

அன்பு — அன்பு என்பது
ஈனும் — கொடுக்கும்
ஆர்வம் — விருப்பம்
உடைமை — உடையதாயிருத்தல்

கருத்துரை :

ஒருவரையொருவர் விரும்புகின்ற பிரியத்தை உண்டாக்குவது அன்பு.

33. அன்றறிவாம் என்னாது அறம் செய்க (36)

சொற்பொருள் :

அன்றறிவாம் — முதுமைக்காலத்தில் அறிந்து கொண்டு
என்னாது — செய்பவராவோம் என்று நினைக்காமல்
அறம் செய்க — அறத்தினைச் செய்வாயாக

கருத்துரை :

முதுமைக்காலத்தில் அறத்தைச செய்யலாம் என்று நினைத்துத் தள்ளிப்போடாமல் இப்போதே செய்ய வேண்டும்.

34. ஆற்றின் அளவறிந்து ஈக (477)

சொற்பொருள் :

ஆற்றின் — ஈதல் செய்யும் நெறியில்
அளவறிந்து — தன்னிடமுள்ள செல்வத்தின் அளவுக்கேற்ப

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈக — ஈதல் வேண்டும்.

கருத்துரை :

தானம் கொடுப்பதிலும் உன்னுடைய செல்வத்தின் அளவினை அறிந்து அதற்கேற்பக் கொடுக்க வேண்டும்.

35. ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் (225)

சொற்பொருள் :

ஆற்றுவார் — நல்ல செயல்களைச் செய்வோர்
ஆற்றல் — செய்தல்
பசி — பசியினை
ஆற்றல் — போக்குதல்

கருத்துரை :

நல்ல செயலைச் செய்வதென்பது பிறரது பசியைப் போக்குதலே ஆகும்.

36. இடுக்கண் வருங்கால் நகுக (621)

சொற்பொருள் :

இடுக்கண் — துன்பம்
வருங்கால் — வரும்பொழுது
நகுக — சிரியுங்கள்

கருத்துரை :

துன்பம் வரும்போது அதற்காக மனம் வருந்தாமல் சிரியுங்கள்.

37. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக (712)

சொற்பொருள் :

இடை — பலர் கூடியிருக்கும் சபையின் நேரத்தினையும், குழுமி உள்ளோரின் நிலையினையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிந்து — ஆராய்ந்து அறிந்து
நன்கு — குற்றமில்லாமல்
உணர்ந்து — தெளிந்து
சொல்லுக — சொல்லுதல் வேண்டும்

கருத்துரை :

பலர் கூடியிருக்கும் சபையின் நேரத்தினையும், குழுமிருக்கும் மக்களின் நிலைமையினையும், ஆராய்ந்து அறிந்து, அதற்கேற்பக் குற்றமில்லாமல் தெளிந்து சொல்லுதல் வேண்டும்.

38. இலன் என்று தீயவை செய்யற்க (205)

சொற்பொருள் :

இலன் என்று — ஒன்றும் இல்லாதவன், ஏழை
தீயவை — தீய செயல்களை
செய்யற்க — செய்யக்கூடாது

கருத்துரை :

பொருள் இல்லாத ஏழை என்பதற்காகத் தீய செயல்களைச் செய்யக்கூடாது.

39. இன்பம் விழையான் வினை விழைவான் (615)

சொற்பொருள் :

வினை — தொழில்
விழையான் — விரும்பாதவன்
விழைவான் — விரும்புவான்

கருத்துரை : —

இன்பத்தை விரும்பாதவன் தொழில் செய்வதையே விரும்புவான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

40. இன்மையுள் இன்மை விருந்தொரால் (153)

சொற்பொருள் :

இன்மையுள் — இல்லாமை, வறுமை என்பவற்றுள்
இன்மை — இல்லாமை, வறுமை
விருந்தொரால் — விருந்தினர்களை உபசரிக்காதிருத்தல்

கருத்துரை :

வறுமைகளில் எல்லாம் மிகுந்த வறுமை விருந்தினர்களை உபசரிக்காதிருத்தலே.

41. ஈதல் இசைபட வாழ்தல் (231)

சொற்பொருள் :

ஈதல் — பிறருக்குக் கொடுத்தல்
இசைபட — புகழ் ஏற்படும் வண்ணம்
வாழ்தல் — வாழ்தல் வேண்டும்

கருத்துரை :

ஏழைகளுக்குத் தானம் கொடுப்பதும் புகழ்பெறும் வண்ணம் வாழ்தலும் சிறப்புடையதாகும்.

42. ஈர்ங்கை விதிரார் கயவர் (1077)

சொற்பொருள் :

ஈர்ங்கை — உணவு சாப்பிட்டுப் பூசிய ஈரக்கை
விதிரார் — தெறிக்கமாட்டார்கள்
கயவர் — கயவர்கள்— கஞ்சர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

உணவு சாப்பிட்டபின், கைவிரல்களுக்கிடையில் ஒட்டியிருக்கும் உணவுப் பருக்கைகளைக் கூடப் பிறருக்குத் தெறிக்க முன்வராதவர்களாவர்கள் கஞ்சர்கள்— கருமிகள்.

43. உடையர் எனப்படுவது ஊக்கம் (591)

சொற்பொருள் :

உடையர்	—	உடையவர்
எனப்படுவது	—	என்று சொல்லப்படுவது
ஊக்கம்	—	ஊக்கம் என்னும் மன உணர்ச்சி

கருத்துரை :

ஊக்கம் உடையவர்களையே ஒன்றினை உடையவர் என்று சொல்லத்தகும்.

44 உண்ணற்க கள்ளை (922)

சொற்பொருள் :

உண்ணற்க	—	சாப்பிடக் கூடாது
கள்ளை	—	கள்ளினை

கருத்துரை :

அறிவினை மயக்கும் கள்ளினைக் குடிக்கக்கூடாது.

45. உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை (60)

சொற்பொருள் :

உரம்	—	திண்மையான அறிவு— பலம்
ஒருவர்க்கு	—	ஒருவருக்கு
உள்ள வெறுக்கை	—	ஊக்கம்— மனஉறுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

ஒருவனுக்கு வலிமை என்று சொல்லப்படுவதே அவனது மன உறுதிதான்.

46. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் (667)

சொற்பொருள் :

உருவுகண்டு — ஒருவனது உருவத்தைப் பார்த்து

எள்ளாமை — இகழாதிருத்தல்

கருத்துரை :

ஒருவனது உருவத்தைப் பார்த்து இகழாதிருத்தல் வேண்டும்.

47. உலகத்து இயற்கை அறிந்து செயல் (637)

சொற்பொருள் :

உலகத்து — உலகத்தில்

இயற்கை — அவ்வப்போது நடக்கின்ற நிலைமைகளை

அறிந்து — தெரிந்து

செயல் — செய்தல் வேண்டும்

கருத்துரை :

உலகத்தில் அவ்வப்போது நடக்கின்ற இயற்கை நிலைமைகளை நன்கு அறிந்து, அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

48. உலகம் தழீஇயது ஒட்பம் (425)

சொற்பொருள் :

உலகம் — உலகத்தில் உள்ள சான்றோர்கள்
தழீஇயது — நட்பாக்கிக் கொள்ளுவது
ஒட்பம் — அறிவுடைமை

கருத்துரை :

உலகத்தில் உள்ள சான்றோர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுவது ஒருவனுக்குச் சிறந்த அறிவுடைமை ஆகும்.

49. உழுவார் உலகத்தார்க்கு ஆணி (1032)

சொற்பொருள் :

உழுவார் — உழவுத் தொழில் செய்பவர்
உலகத்தார்க்கு — உலகத்திலுள்ள மக்களுக்கு
ஆணி — அச்சாணி

கருத்துரை :

உழவுத் தொழில் செய்கிறவர்கள், தேர்ச்சக்கரத்தின் அச்சாணி போல், உலகத்தார்க்கெல்லாம் ஆதாரமானவர்களாய் இருக்கிறார்கள்.

50. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033)

சொற்பொருள் :

உழுது — உழவுத் தொழில் செய்து
உண்டு — சாப்பிட்டு.
வாழ்வாரே — வாழ்பவர்களே
வாழ்வார் — வாழ்கின்றவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

உழவுத் தொழில் செய்து அதன் வழித் தமது உணவுப் பொருள்களைச் சாப்பிட்டு உயிர்வாழ்கிறவர்களே, சுதந்திரமாக வாழ்கின்றவர்கள்.

51. உள்ளத்து அனையது உயர்வு (595)

சொற்பொருள் :

உள்ளத்து — மனத்தின் ஊக்கத்துக்கு
அனையது — தகுந்தாற்போல்
உயர்வு — முன்னேற்றம் கிடைக்கும்

கருத்துரை :

ஒருவற்கு மனத்தில் எவ்வளவு ஊக்கம் இருக்கிறதோ அதற்கேற்ப அவருக்கு உயர்வு கிடைக்கும்.

52. உள்ளற்க உள்ளம் சிறுகுவ (798)

சொற்பொருள் :

உள்ளற்க — நினைக்காதீர்கள்
உள்ளம் — மனம்
சிறுகுவ — குறுக்கி விடக்கூடிய அற்பச் செயல்கள்

கருத்துரை :

உள்ளத்தைக் குறுக்கி விடக்கூடிய அற்பச் செயல்களை நெஞ்சாலும் நினைக்காதீர்கள்.

53. உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் (596)

சொற்பொருள் :

உள்ளுவது — எண்ணுவது, நினைப்பது
எல்லாம் — அனைத்தும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயர்வு — உயர்வான
உள்ளல் — எண்ணவேண்டும்

கருத்துரை :

நினைக்கும் அனைத்தையும் உயர்வான நல்ல செயல்களாகவே நினைக்க வேண்டும்.

54. உறங்கி விழிப்பது போலும் பிறப்பு (339)

சொற்பொருள் :

உறங்கி — தூங்கி
விழிப்பது — எழுந்திருப்பது
போலும் — போன்றது
பிறப்பு — பிறவியானது

கருத்துரை :

தூங்கியபின் விழித்தலைப் போன்றது பிறப்பு.

55. எண்ணித் துணிக கருமம் (467)

சொற்பொருள் :

எண்ணி — நன்கு ஆராய்ந்து
துணிக — செய்யத் தொடங்க வேண்டும்
கருமம் — செயல்

கருத்துரை :

எந்தச் செயலையும் நன்கு ஆராய்ந்த பின் செய்யத் தொடங்க வேண்டும்.

56. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் (125)

சொற்பொருள் :

எல்லார்க்கும் — அனைவருக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்றாம் — நல்லதாகும்

பணிதல் — அடக்கத்துடன் பணிந்து நடத்தல்

கருத்துரை :

பணிந்து அடக்கத்துடன் நடத்தல் எல்லோருக்கும் நல்லதாகும்.

57. எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் (470)

சொற்பொருள் :

எள்ளாத — உலகத்தாரால் இகழ்ந்து கூறப்படாத செயல்கள்

எண்ணிச் செயல் — ஆராய்ந்து அறிந்து செய்தல்

வேண்டும் — வேண்டுவதாகும்

கருத்துரை :

செய்கின்ற செயல் உலகத்தாரால் இகழ்ந்து கூறப்படுமா? என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்துப் பின் அதனைச் செய்ய வேண்டும்.

58. எற்று என்று இரங்குவ செய்யற்க (655)

சொற்பொருள் :

எற்று என்று — 'ஐயோ' இதைச் செய்து விட்டோமே என்று

இரங்குவ — வருத்தப்படும் செயல்களை

செய்யற்க — செய்யாதீர்கள்

கருத்துரை :

'ஐயோ இதைச் செய்துவிட்டோமே' என்று பின்னர் வருத்தப்படும்படியான எந்தச் செயலையும் செய்யாதீர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

59. எனைத்தானும் நல்லவை கேட்க (416)

சொற்பொருள் :

எனைத்தானும்	—	எத்துணை அளவானாலும்
நல்லவை	—	நல்ல அறிவுரைகளை
கேட்க	—	கேட்க வேண்டும்

கருத்துரை :

எத்துணை அளவானாலும் நல்ல அறிவுரைகளைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

60. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் (214)

சொற்பொருள் :

ஒத்தது	—	உலக நடப்புக்கு ஏற்ற செயல்
அறிவான்	—	அறிந்து வாழ்பவன்
உயிர்வாழ்வான்	—	உயிருடன் வாழ்பவன்

கருத்துரை :

உலக நடப்பினை அறிந்து வாழ்பவன்தான் உயிரோடுகூடி வாழ்பவன் ஆவான்.

61. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் (131)

சொற்பொருள் :

ஒழுக்கம்	—	நன்னடத்தை, நல்ல கடமைகளைத் தவறாது செய்தல்
உயிரினும்	—	உயிரைக் காட்டிலும்
ஓம்பப்படும்	—	சிறந்ததாகப் போற்றிக் காக்கப்படும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

ஒழுக்கத்தை, உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றிக் காக்க வேண்டும்.

62. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை (137)

சொற்பொருள் :

ஒழுக்கத்தின் — ஒழுக்கத்தினால்
எய்துவர் — அடைவர்
மேன்மை — சிறப்பு

கருத்துரை :

எல்லோரும் ஒழுக்கத்தினால் உயர்வையும் சிறப்பையும் அடைவார்கள்.

63. ஒன்றாக நல்லது கொல்லாமை (323)

சொற்பொருள் :

ஒன்றாக — தன்னோடு ஒப்பிடமுடியாத
நல்லது — சிறந்தது
கொல்லாமை — பிற உயிர்களைக் கொல்லாதிருப்பது

கருத்துரை :

தன்னோடு ஒப்பிடமுடியாத வண்ணம் தானேயாகச் சிறந்த ஓர் அறமாக இருப்பது கொல்லாமையே ஆகும்.

64. கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் (575)

சொற்பொருள் :

கண்ணிற்கு — கண்களுக்கு
அணிகலன் — அணியப்படுகின்ற ஆபரணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணோட்டம் — தாட்சண்யம், பிற உயிர்கள் படும் துன்பங்கண்டு, மனம் இரங்கி உதவி செய்யும் அருட்குணம்

கருத்துரை :

ஒருவனுடைய கண்களுக்கு அணியப்படும் சிறந்த அணிகலனாகக் கருதப்படுவது, பிற உயிர்கள் படும் துன்பம் கண்டு, மனம் இரங்கி உதவி செய்யும் அருட்குணமாகிய கண்ணோட்டமே ஆகும்.

65. கண்ணுடையர் என்பவர் கற்றோர் (393)

சொற்பொருள் :

கண்ணுடையர் — கண்களை உடையவர்கள்
என்பவர் — என்று சொல்லப்படுபவர்கள்
கற்றோர் — கற்றவர்கள்

கருத்துரை :

கண்ணுடையவர்கள் என்று உயர்வாகச் சிறப்பித்துச் சொல்லப்படுவோர் கற்றவர்களே ஆவர்.

66. கள்வார்க்குத் தள்ளும் உயிர் நிலை (290)

சொற்பொருள் :

கள்வார்க்கு — திருடுகின்றவர்களுக்கு
தள்ளும் — தவறிவிடுவதாகும்
உயிர்நிலை — உயிர் நிற்கின்ற உடம்பு

கருத்துரை :

திருடுகின்றவர்களின் உயிரைச் சுமக்க விரும்பாமல் உடம்பும் விட்டகலும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

67. கற்க கசடறக் கற்பவை (391)

சொற்பொருள் :

கற்பவை — படிப்பதற்குரிய நூல்களை
கசடு — பழுது, குற்றம், சந்தேகம்
அற — இல்லாமல்
கற்க — படிக்க வேண்டும்

கருத்துரை :

படிப்பதற்குரிய நூல்களைச் சந்தேகம் இல்லாத வகையில் தெளிவாக நன்கு படிக்க வேண்டும்.

68. கற்றனைத்து ஊறும் அறிவு (396)

சொற்பொருள் :

கற்றனைத்து — கற்ற அளவிற்கு
ஊறும் — சுரக்கும், பெருகும்
அறிவு — அறிவானது

கருத்துரை :

கற்ற அளவிற்கு ஏற்ப அறிவானது பெருகும்.

69. கற்றிலன் ஆயினும் கேட்க (414)

சொற்பொருள் :

கற்றிலன் — படிக்காதவன்
ஆயினும் — ஆனாலும்
கேட்க — கற்றவர்கள் சொல்வதைக கேட்க வேண்டும்

கருத்துரை :

ஒருவன் நூல்களைப் படிக்காவிட்டாலும், அவற்றைப் படித்தவர்கள் சொல்வதைக் கருத்தூன்றிக் கேட்க வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

70. குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் (954)

சொற்பொருள் :

குடிப்பிறந்தார் — ஒழுக்கத்தில் சிறந்த குடும்பத்தில் பிறந்தோர்

குன்றுவ — ஒழுக்கத்தில் குறைந்த செயல்களை

செய்தல் இலர் — செய்ய மாட்டார்கள்

கருத்துரை :

ஒழுக்கத்தில் சிறந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒழுக்கம்கெட்ட செயல்களைச் செய்யமாட்டார்கள்.

71. குற்றமே அற்றம் தரும் பகை (434)

சொற்பொருள் :

குற்றமே — குற்றம்தான்

அற்றம் — இறுதி, முடிவு, அழிவு

தரும் — அளிக்கும்

பகை — விரோதம், எதிரீ

கருத்துரை :

ஒருவனுக்கு அழிவினைத் தரும் விரோதி குற்றம் தான்.

72. கெட்டார்க்கு நட்டார் இல் (1293)

சொற்பொருள் :

கெட்டார்க்கு — வறுமையால் வாடுவோர்க்கு

நட்டார் — நண்பர்கள்

இல் — இல்லையாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

வறுமையால் வாடும் ஏழைகளிடம் நட்புக்கொள்ளும் நண்பர்கள் இல்லை.

73. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி (400)

சொற்பொருள் :

கேடு — அழிவு
இல் — இல்லாத
விழுச்செல்வம் — சீர்மை நிறைந்த செல்வம்

கருத்துரை :

ஒருவனுக்கு அழிவில்லாத சிறப்புமிக்க செல்வமானது கல்வியே ஆகும்.

74. கைம்மாறு வேண்டா கடப்பாடு (211)

சொற்பொருள் :

கைம்மாறு — பதில் உதவி, மறுஉதவி
வேண்டா — எதிர்பார்க்காமல்
கடப்பாடு — கடமை

கருத்துரை :

பதில் உதவிகளை எதிர்பார்க்காமல் கடமைகளைச் செய்ய வேண்டும்.

75. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் (597)

சொற்பொருள் :

சிதைவிடத்து — தாம் கருதிய உயர்வுக்குத் தடை ஏற்படும்போது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒல்கார் — மனம் தளரமாட்டார்கள்
உரவோர் — மன உறுதியும், ஊக்கமும் கொண்டவர்கள்

கருத்துரை :

மன உறுதியும், ஊக்கமும் கொண்டவர்கள் தாம் கருதிய உயர்வுக்குத் தடையோ, அழிவோ ஏற்பட்டாலும் மனம் தளரமாட்டார்கள். மாறாக அதனை அடைய மேலும் முயற்சி செய்வார்கள்.

76. செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் (411)

சொற்பொருள் :

செல்வத்துள் — செல்வங்களுள் எல்லாம்
செல்வம் — சிறப்பான செல்வம்
செவிச்செல்வம் — கேட்பதனால் பெறும் பயன்

கருத்துரை :

செவியால் கேட்டுப் பயன்பெறும் செவிச் செல்வம் மற்றெல்லாச் செல்வங்களிலும் தலையாயதாகும்.

77. செயற்கரிய செய்வார் பெரியர் (26)

சொற்பொருள் :

செயற்கரிய — செய்வதற்குக் கடினமான செயல்களை
பெரியர் — பெரியோர்கள்
செய்வார் — செய்பவர்கள்

கருத்துரை :

செய்வதற்குக் கடினமான செயல்களைச் செய்பவர்களே பெரியோர்கள்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

78. செயற்கரிய யாவுள நட்பின் ? (781)

சொற்பொருள் :

யாவுள	—	எவை உள்ளன? என்ன இருக்கிறது?
நட்பின்	—	நட்புக்கொள்வதைவிட, சிநேகத்தைக் காட்டிலும்
செயற்கரிய	—	தேடிச்செய்து கொள்ள வேண்டிய, அருமையான செயல்

கருத்துரை :

சிநேகத்தைக் காட்டிலும் தேடிச் செய்து கொள்ள வேண்டிய சிறப்புடையது வேறு என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லை.

79. செய்க பொருளை (759)

சொற்பொருள் :

செய்க	—	உண்டாக்கிக் கொள்ளுங்கள்
பொருளை	—	செல்வத்தினை

கருத்துரை :

செல்வத்தைச் சம்பாதியுங்கள்.

80. செய்தக்க அல்ல செயக் கெடும் (466)

சொற்பொருள் :

செய்தக்க அல்ல	—	செய்யக்கூடாத செயல்களை
செய	—	செய்வதால்
கெடும்	—	தீமை ஏற்படும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

செய்யக்கூடாத செயல்களைச் செய்வதால் தீமை ஏற்படும்.

81. செய்யற்க சான்றோர் பழிக்கும்வினை (656)

சொற்பொருள் :

செய்யற்க — செய்யாதிருக்க வேண்டும்
சான்றோர் — அறிவும் ஒழுக்கமும் நிறைந்தோர்
பழிக்கும் வினை — பழிக்கின்ற தொழில்

கருத்துரை :

அறிவும் ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்கள் பழிக்கின்ற தொழில்களைச் செய்யா திருக்கவேண்டும்.

82. சொல்லற்க முன்னின்று பின்னோக்காச்சொல் (184)

சொற்பொருள் :

முன்னின்று — ஒருவன் முன்னே இல்லாத போது
பின்னோக்கா — பின்னர் வருவதான தீமையினை நினைக்காத
சொல் — சொற்களை (கோள்)
சொல்லற்க — சொல்லாதீர்கள்.

கருத்துரை :

ஒருவன் நமக்கு முன்னே இல்லாதபோது, பின்னர் வருவதான தீமைகளை நினைத்துப் பார்க்காமல் கோள் சொல்லக்கூடாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

83. சொல்லுக சொல்லில் பயனுடைய (200)

சொற்பொருள் :

சொல்லில்	—	சொற்கள் பலவற்றுள்ளும்
பயனுடைய	—	பயன் தரக்கூடிய சொற்களையே
சொல்லுக	—	பேசுங்கள்

கருத்துரை :

சொற்கள் பலவற்றுள்ளும் பயன்தரக்கூடிய சொற்களையே சொல்லுங்கள்.

84. சொல்லுதல் யார்க்கும் எளிய (664)

சொற்பொருள் :

சொல்லுதல்	—	தொழில் செய்வதைச் சொல்லால் சொல்லுதல்
யார்க்கும்	—	எல்லோருக்கும்
எளிய	—	எளிமையானதேயாகும்

கருத்துரை :

யான் இதைச் செய்வேன், அதைச் செய்வேன் என்று சொல்லுதல் எல்லோருக்கும் எளிமையானதே ஆகும்.

85. சொற்கோட்டம் இல்லது செப்பம் (119)

சொற்பொருள் :

சொற்கோட்டம்	—	சொல்லுகிற சொல்லில் கோணுதல்
இல்லது	—	இல்லாதிருப்பது
செப்பம்	—	நடுவுநிலைமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

நடுவுநிலைமை என்பதே சொல்லுகின்ற தீர்ப்பில் ஒரு பக்கத்திலும் சாய்ந்துவிடாமல் நியாயமான முடிவினை வழங்குதலே.

86. தம்பொருள் என்ப தம்மக்கள் (63)

சொற்பொருள் :

தம் — தமது
பொருள் — பொருள்கள், செல்வம்
என்ப — என்று அறிந்தோர் கூறுவர்
மக்கள் — குழந்தைகள்

கருத்துரை :

நம்முடைய செல்வம் என்பதே நமது குழந்தைகள் தான் என அறிந்தோர் கூறுவர்.

87. தன்னெஞ்சு அறிவது பொய்யற்க (293)

சொற்பொருள் :

தன்னெஞ்சு — தன்னுடைய மனம்
அறிவது — அறிந்து கொண்டிருப்பதனை
பொய்யற்க — பொய்பேசாதிருக்க வேண்டும்

கருத்துரை :

ஒருவன் தனது மனம் அறிந்த ஒன்றினை மறைத்துப் பொய்யினைச் சொல்லாதிருப்பானாக.

88. தன்னைத்தான் காக்கின் சினம் காக்க (305)

சொற்பொருள் :

தன்னைத்தான் — தன்னைத்தானே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காக்கின் — துன்பத்திலிருந்து காப்பற்ற விரும்பினால்

சினம் — கோபம்

காக்க — வராதபடி காத்துக் கொள்ள வேண்டும்

கருத்துரை :

ஒருவன் தன்னைத் தானே துன்பத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள விரும்பினால், தன் மனத்தில் கோபம் வராதபடி காத்துக்கொள்ள வேண்டும்.

89. திறன் அறிந்து சொல்லுக சொல்லை (644)

சொற்பொருள் :

திறன் — சொல்லின் பொருளும், பயனும்

அறிந்து — தெரிந்து

சொல்லை — சொல்லினை — பேச்சினை

சொல்லுக — சொல்லுங்கள்

கருத்துரை :

எந்தச் சொல்லைச் சொன்னாலும் அதன் பொருளையும், பயனையும் அறிந்து சொல்ல வேண்டும்.

90. துணைநலம் ஆக்கம் தரும (651)

சொற்பொருள் :

துணைநலம் — துணைவர்களின் நன்மை

ஆக்கம் — செல்வம்

தரும் — தருவதாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

துணைவர்கள் நல்லவர்களா என்பதைக் கவனித்து அவர்களுடன் ஒரு செயலைச் செய்தால் அதில் வெற்றியும் செல்வமும் பெறமுடியும்.

91. துன்பத்திற்கு யாரே துணையாவார்? (1299)

சொற்பொருள் :

துன்பத்திற்கு — துன்பம் வந்தபோது
யாரே — வேறு யார்?
துணையாவார் — துணையாக இருப்பவர்

கருத்துரை :

ஒருவருக்குத் துன்பம் வந்துவிட்ட சமயத்தில் அதனை நீக்குவதற்கு யார்தான் துணையாக முன் வருவார்கள்?

92. தூங்கற்க தூங்காது செய்யும்வினை (672)

சொற்பொருள் :

தூங்காது — காலந்தாழ்த்தாமல்— காலங் கடத்தாமல்
செய்யும் — செய்ய வேண்டிய
வினை — தொழில்
தூங்கற்க — காலங்கடத்தக் கூடாது

கருத்துரை :

காலங்கடத்தாது உடனடியாகச் செய்ய வேண்டிய தொழில்களைக் காலங்கடத்தித் தாமதமாகச் செய்தல் கூடாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

93. தேறற்க யாரையும் தேராது (509)

சொற்பொருள் :

யாரையும் — எவரையும்
தேராது — ஆய்ராந்து கொள்ளாமல்
தேறற்க — தேர்ந்தெடுக்காதீர், நம்பிவிடாதீர்

கருத்துரை :

யாரையும் நன்கு ஆராய்ந்து அறியாமல் நம்பி விடாதீர்கள்.

94. தோன்றில் புகழொடு தோன்றுக (236)

சொற்பொருள் :

தோன்றில் — உலகில் பிறந்தால்
புகழொடு — புகழடைவதற்கேற்ற குணங்களையும் செயல்களையும் உடையவராய்
தோன்றுக — தோன்றுங்கள்

கருத்துரை :

உலகத்தில் பிறந்தால், பலரும் புகழக்கூடிய குணங்களையும் செயல்களையும் உடையவராய்ப் பிறத்தலே சிறப்புடையதாகும்.

95. நகுதல் பொருட்டன்று நட்டல் (784)

சொற்பொருள் :

நகுதல் — சிரித்துப் பழகுதல்
பொருட்டன்று — காரணமல்ல
நட்டல் — ஒருவரோடொருவர் நட்புச் செய்து கொள்ளுவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

ஒருவரோடொருவர் பழகி, நட்புச் செய்து கொள்ளுவது சிரித்துப் பேசுவதற்கு மட்டுமன்று. இருவரில் ஒருவர் தவறுசெய்யும்போது தட்டிக் கேட்பதற்கும்தான்.

96. நல்லாறு எனினும் கொளல் தீது (222)

சொற்பொருள் :

நல்லாறு — நன்மை தரும் வழி
எனினும் — என்றாலும்
கொளல் — பிறரிடம் கையேந்திப் பெறுதல்
தீது — குற்றமான செயலாகும்— தீமைதரும் செயலாகும்

கருத்துரை :

நன்மைதரும் என்றாலும் பிறரிடம் ஒரு பொருளைக் கையேந்திப் பெறுதல் தீமை பயப்பதாகும்.

97. நல்லாற்றான் நாடி அருள் ஆள்க (242)

சொற்பொருள் :

நல்லாற்றான் — நல்ல நெறிகளைக் கண்டு
நாடி — ஆராய்ந்து
அருள் — அருளினை
ஆள்க — உடையவர்களாக ஆகுங்கள்

கருத்துரை :

நன்றாக ஆராய்ந்து பார்த்துச் சிறந்த வழியைக் கண்டு, அதன் வழி அருள் வாழ்வைக் கடைப்பிடியுங்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

98. நன்றி மறப்பது நன்று அன்று (108)

சொற்பொருள் :

நன்றி — ஒருவர் செய்த நன்மையை
மறப்பது — மறந்துவிடுதல்
நன்று — நல்லது
அல்ல — இல்லை

கருத்துரை :

ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல.

99. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் (138)

சொற்பொருள் :

நன்றிக்கு — அறமான நன்மைக்கு
வித்தாகும் — விதையாகும்
நல்லொழுக்கம் — நல்ல நடத்தை

கருத்துரை :

அறச் செயலாகிய நன்மைக்கு வித்தாக விளங்குவது நல்லொழுக்கமே!

100. நாடென்ப நாடா வளத்தன (739)

சொற்பொருள் :

நாடென்ப — சிறந்த நாடு என்று நூலோர் கூறுவர்
நாடா — மக்கள் தேடி வருந்தாமல்
வளத்தன — வளங்களை உடையன

கருத்துரை :

மக்கள் தம் வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளுக்காகத் தேடி வருந்தாமல், அவைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எளிதில் கிடைக்கக்கூடிய இடமாக அமைவதே நாடு என்று அறிஞர்கள் கூறுவர்.

101. நீர்இன்று அமையாது உலகு (20)

சொற்பொருள் :

நீர் இன்று — நீரில்லாமல், மழை இல்லாமல்
உலகு — உலக வாழ்க்கை
அமையாது — நடைபெறாது

கருத்துரை :

மழை இல்லாமல் உலகவாழ்க்கை நடைபெற முடியாது.

102. நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் (706)

சொற்பொருள் :

நெஞ்சம் — மனம்
கடுத்தது — மிகுந்து மேலெழுந்து நிற்கிற உணர்ச்சி
காட்டும் — காட்டிவிடும்
முகம் — ஒருவனுடைய முகம்

கருத்துரை :

ஒருவனது உள்ளத்தில் மிகுந்து மேலெழுந்து நிற்கிற கோபம், வெறுப்பு, முதலான அக உணர்ச்சிகளை அவனது புற உறுப்பான முகம் காட்டிவிடும்.

103. பண்புடையார் பட்டுண்டு உலகம் (996)

சொற்பொருள் :

பண்புடையார் — பண்பு நிறைந்த மக்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டு	—	வாழ்ந்து வருவதால்
உலகம் உண்டு	—	உலகம் நிலைபெற்றுள்ளது

கருத்துரை :

பண்பு நிறைந்த மக்களைப் பெற்றிருப்பதால்தான், உலகம் நிலைபெற்றிருக்கிறது.

104. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் (482)

சொற்பொருள் :

பருவத்தோடு	—	காலத்தோடு
ஒட்ட	—	பொருந்த
ஒழுகல்	—	நடந்து கொள்ளுதல்

கருத்துரை :

காலத்தை அறிந்து அதற்கேற்ப அந்தந்தச் செயல் களைச் செய்து முடிக்கவேண்டும்.

105 பரிந்து ஓம்பிக்காக்க ஒழுக்கம் (132)

சொற்பொருள் :

பரிந்து	—	வருந்தி
ஓம்பி	—	போற்றி
காக்க	—	பாதுகாக்க வேண்டும்
ஒழுக்கம்	—	ஒழுக்கத்தினை

கருத்துரை :

எந்த நிலையிலும் ஒழுக்கத்திலிருந்து தவறாமல், அதனைப் போற்றியும், தொல்லைகள் ஏற்படும்போது அதற்காக வருந்தாது அவற்றைப் பொறுத்துக் கொண்டும் காத்தல் வேணடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

106 பற்றுக பற்றற்றான் பற்றினை (350)

சொற்பொருள் :

பற்றுஅற்றான் — பற்றில்லாத இறைவன்
பற்றினை — அன்பினை
பற்றுக — பிடித்துக்கொள்ளுங்கள்

கருத்துரை :

பற்று இல்லாத இறைவனின் அன்பினை மனதில் பற்றிக் கொள்ளுங்கள்.

107. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (972)

சொற்பொருள் :

எல்லா — அனைத்து
உயிர்க்கும் — உயிர்களுக்கும்
பிறப்பு — பிறப்பால்
ஒக்கும் — ஒரே மாதிரி இருக்கும்

கருத்துரை :

பிறப்பால் அனைத்து மக்களும் ஒரே தன்மையினரே.

108. பிறர்தீமை சொல்லா நலத்து சால்பு (984)

சொற்பொருள் :

பிறர்தீமை — பிறர் செய்யும் குற்றங்களை
சொல்லா — சொல்லாதிருப்பது
நலத்தது — குணத்தினை உடையது
சால்பு — சான்றாண்மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

பிறர் செய்யும் குற்றங்களைப் பலர் அறியச் சொல்லாதிருப்பதே சான்றாண்மை என்னும் உயரிய குணத்தை உடையவர்களின் இயல்பு.

109. புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் (538)

சொற்பொருள் :

புகழ்ந்தவை — அறநூலோர் புகழ்ந்து கூறிய கடமைகளை
போற்றி — கடைப்பிடித்து
செயல் — செய்தல்
வேண்டும் — வேண்டுவதாகும்

கருத்துரை :

அறநூலோர் புகழ்ந்து கூறிய கடமைகளைத் தவறாது கடைப்பிடித்துச் செய்தல் வேண்டும்

110. பெண்ணிற் பெருந்தக்க யாவுள ? (54)

சொற்பொருள் :

பெண்ணில் — மனைவியைக் காட்டிலும்
பெருந்தக்க — மேம்பட்டவை
யாஉள — யாவை உள்ளன

கருத்துரை :

ஒருவனுக்குக் குணநலம் மிக்க மனைவியைக் காட்டிலும் மேம்பட்ட பொருள்கள் எவை உள்ளன? ஒன்றுமில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

111. பெருக்கத்து வேண்டும் பணிதல் (963)

சொற்பொருள் :

பெருக்கத்து — நிறைந்த செல்வம் உண்டான போது
பணிதல் — யாரிடத்தும் அடக்கத்துடன் நடத்தல்
வேண்டும் — வேண்டுவதாகும்

கருத்துரை :

செல்வம் நிறைந்தவர்களாக இருக்கும்போது யாரிடத்தும் பணிவுடையவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

112. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை (533)

சொற்பொருள் :

பொச்சாப்பார்க்கு — மறதி உள்ளவர்களுக்கு
புகழ்மை — புகழ்
இல்லை — இல்லாதாகும்

கருத்துரை :

மறதிக் குணம் உள்ளவர்களுக்குப் புகழ் இல்லை.

113. பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ் (156)

சொற்பொருள் :

பொறுத்தார்க்கு — பொறுமைக்குணம் கொண்டவர்களுக்கு
பொன்றும் -- உலகம் அழியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணையும் — காலம் வரை
புகழ் — புகழ் இருந்து கொண்டே இருக்கும்

கருத்துரை :

பொறுமைக் குணம் கொண்டவர்களுக்கு, உலகம் அழியும் காலம் வரை பெருமையும் புகழும் இருந்து கொண்டே இருக்கும்.

114. பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை (252)

சொற்பொருள் :

பொருள் — செல்வம், வைத்துள்ள பொருளினால்
ஆட்சி — பயனடைதல்
போற்றாதார்க்கு — போற்றிக் காப்பாற்றாதவர் களுக்கு
இல்லை — இல்லாதாகும்

கருத்துரை :

செல்வத்தைப் போற்றிக் காப்பாற்றாதவர்களுக்கு அதனால் ஏற்படும் பயன் கிடைக்காது.

115. பொய்யாமை அன்ன புகழ் இல்லை (296)

சொற்பொருள் :

பொய்யாமை — பொய் சொல்லாமை
அன்ன — போன்ற
புகழ் இல்லை — புகழ் இல்லையாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

பொய் சொல்லாமை என்னும் உயர்ந்த குணத்தைப் போன்று புகழுக்குக் காரணமானது வேறு எதுவும் இல்லை

116. மக்களே போல்வர் கயவர் (1071)

சொற்பொருள் :

கயவர் — கீழ்மக்கள், மனிதத்தன்மை இல்லாதோர்

மக்களே — தோற்றத்தால் மக்கள்

போல்வர் — போலவே இருப்பர்

கருத்துரை :

மனிதத்தன்மை எதுவுமே இல்லாத கீழ்மக்கள் வடிவத்தால் முழுவதும் மக்களைப் போலவே இருப்பர்.

117. மங்கலம் என்ப மனைமாட்சி (60)

சொற்பொருள் :

மனைமாட்சி — மனைவியினுடைய நல்ல குணங்கள்

மங்கலம் — மங்கலமான சிறப்பு

என்ப — என்று கூறுவர்

கருத்துரை :

மனைவியினுடைய நற்குண, நற்செயல்களையே இல்லறத்திற்கு மங்கலம் என்று கூறுவர்.

118. மடியுடையார் மாண்பயன் எய்தல் அரிது (606)

சொற்பொருள் :

மடியுடையார் — சோம்பல் குணம் உள்ளவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாண்பயன் — சிறப்பான நன்மைகளை
எய்தல் — அடைதல், பெறுதல்
அரிது — கடினம்

கருத்துரை :

சோம்பல குணம் உள்ளவர்கள் சிறப்பான நன்மைகளைப் பெறுதல் கடினம் ஆகும்.

119. மரம்போல்வர் மக்கட்பண்பில்லாதவர் (997)

சொற்பொருள் :

மக்கட்பண்பு — நல்லவர்களுக்கு இருக்க வேண்டிய உயர்ந்தபண்பு
இல்லாதவர் — இல்லாதவர்கள்
மரம்போல்வர் — மரத்திற்குச் சமமாவர்

கருத்துரை :

நல்ல மக்களுக்குரிய உயர்ந்த பண்புகள் இல்லாதவர்கள் மரத்திற்குச் சமமாவர்.

120. மருவுக மாசற்றார் கேண்மை (800)

சொற்பொருள் :

மாசற்றார் — குற்றமில்லாதவர்கள்
கேண்மை — நட்பு
மருவுக — தழுவிக்கொள்ளுங்கள்,

கருத்துரை :

குற்றமில்லாதவர்களின் நட்பினை விட்டுவிடாது தழுவிக்கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

121. மறந்தும் பிறன்கேடு சூழற்க (204)

சொற்பொருள் :

பிறன்கேடு	—	மற்றவனுக்குத் தீங்கினை
மறந்தும்	—	மறந்தும் கூட
சூழற்க	—	நினையாதிருங்கள்

கருத்துரை :

மறந்தும்கூட மற்றவனுக்குத் தீங்கினை நினையாதீர்கள்.

122. மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (457)

சொற்பொருள் :

மன்னுயிர்க்கு	—	நிலைபெற்ற உயிர்களுக்கு
மனநலம்	—	மனம் நன்றாக இருப்பது
ஆக்கம்	—	செல்வம்

கருத்துரை :

ஒருவனது நல்ல மனம் பிற உயிர்களுக்கு நன்மையைச் செய்யும். அந்த நல்ல மனமே அவனுக்குச் சிறந்த செல்வமாகும்.

123. முகம் நக நட்பது நட்புஅன்று (786)

சொற்பொருள் :

முகம்	—	முகத்தினால் மட்டும்
நக	—	மலர்ச்சியினைச் செய்து
நட்பது	—	நட்புக்கொள்ளுவது
நட்பு அன்று	—	நட்பு ஆகாது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

ஒருவரைக் கண்டபோது, முகத்தினால் மட்டும் மலர்ந்து நட்புக் கொள்ளுவது நட்பு ஆகாது.

124. முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை (449)

சொற்பொருள் :

முதல்	—	மூலதனம்
இல்லார்க்கு	—	இல்லாதவர்களுக்கு
ஊதியம்	—	இலாபம்
இல்லை	—	இல்லாதாகும்

கருத்துரை :

மூலதனம் இல்லாது தொழிலில் ஈடுபடுவோர்க்கு, அதனால் வரும் இலாபம் கிடைக்காமல் போய்விடும்.

125. முயற்சி திருவினை ஆக்கும் (616)

சொற்பொருள் :

முயற்சி	—	முயற்சியானது
திருவினை	—	செல்வத்தினை, வெற்றியினை
ஆக்கும்	—	வளர்க்கும், தரும்

கருத்துரை :

முயற்சியானது வெற்றியைத் தரும்.

126. மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)

சொற்பொருள் :

மெய்ப்பொருள்	—	உண்மையான பொருள்
காண்பது	—	ஆராய்ந்து பார்ப்பது
அறிவு	—	அறிவுடைமை ஆகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

ஒரு பொருளினுடைய உண்மையான தன்மையை ஆராய்ந்து அறிதலே சிறந்த அறிவுடைமை ஆகும்.

127. யாகாவார் ஆயினும் நா காக்க (127)

சொற்பொருள் :

யா — எதனையும்
காவார் — காக்கமாட்டார்
ஆயினும் — ஆனாலும்
நா — நாக்கு ஒன்றினை மட்டும்
காக்க — காப்பாற்றிக் கொள்ளுதல் வேண்டும்

கருத்துரை :

அடக்க வேண்டிய ஐம்புலன்களையும் அடக்கா விட்டாலும், நாக்கு ஒன்றினை மட்டுமாவது அடக்க வேண்டும்.

128. வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் (240)

சொற்பொருள் :

வசை — குற்றம்
ஒழிய — தம்மிடம் இல்லாதபடி
வாழ்வாரே — வாழ்பவர்களே
வாழ்வார் — உயிருடன் வாழ்பவராவர்

கருத்துரை :

தம்மிடம் குற்றம் இல்லாதபடி வாழ்பவர்களே உயிருடன் வாழ்பவர்களாகக் கருதப்படுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

129. வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை (221)

சொற்பொருள் :

வறியார்க்கு	—	வறுமையாளர்களுக்கு
ஒன்று	—	ஒருபொருளையேனும்
ஈவதே	—	கொடுப்பதே
ஈகை	—	ஈகை எனும் உதவியாகும்

கருத்துரை :

வறுமையால் துன்புறும் ஏழைகளுக்கு, ஒரு பொருளையாவது கொடுத்து உதவுவதே உண்மையான ஈகை ஆகும்.

130. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை (439)

சொற்பொருள் :

எஞ்ஞான்றும்	—	எக்காலத்திலும்
தன்னை	—	தன்னைத்தானே
வியவற்க	—	பெருமைப்படுத்திப் பேசக் கூடாது

கருத்துரை :

எப்போதும் தன்னைத்தானே பெருமைப்படுத்திப் பேசிக்கொள்ளக்கூடாது.

131. வினைசெய்வான் கோடாமை கோடாது உலகு (520)

சொற்பொருள் :

வினை	—	தொழில்
செய்வான்	—	செய்பவன்
கோடாமை	—	மனம் கோணாதிருக்க
உலகு	—	உலகம்
கோடாது	—	கோணாது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துரை :

தொழில் செய்யும் ஒருவன் தன் மனம் கோணா திருந்தால், உலகம் செம்மையாக நடக்கும்.

132. வினைத்திட்பம் வேண்டாரை வேண்டாது உலகு (680)

சொற்பொருள் :

வினைத்திட்பம்	—	எடுத்த செயலின் நெளிவு சுளிவு அறிந்து, மனஉறுதி யோடு செய்வது
வேண்டாரை	—	விரும்பி மேற்கொள்ளாதவர் களை
உலகு	—	உலகின் உயர்ந்தோர்கள்
வேண்டாது	—	மதிக்க மாட்டார்கள்

கருத்துரை :

ஒரு தொழிலின் திட்பநுட்பத்தை விரும்பி அறிந்து, அதன்படித் தொழிலைச் செய்யாதவர்களை, உலகில் உள்ள உயர்ந்தோர்கள் மதிக்கமாட்டார்கள்.

133. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் (177)

சொற்பொருள் :

வெஃகியாம்	—	பிறரது பொருள்களின் மேல் ஆசைப்பட்டு அதனை வஞ்சனையால் கைப்பற்றுதல்
ஆக்கம்	—	செல்வம்
வேண்டற்க	—	விரும்பாதிருப்பாயாக

கருத்துரை :

பிறரது பொருள்களின்மேல் ஆசைப்பட்டு, அதனை வஞ்சனையால் கைப்பற்ற விரும்பாதீர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஔவையார் ஆத்திசூடி

கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

நூல்

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புர ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகம் சுருக்கேல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14. கண்டு ஒன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட உரை
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தந்தை தாய்ப் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர்செய்
23. மண் பறித்து உண்ணேல்
24. இயல்பு அலாதன செயேல்
25. அரவம் ஆடேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செயேல்
29. இளமையில் கல்
30. அரனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப்பட வாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட்டு ஒழி
43. சக்கர நெறி நில்
44. சான்றோர் இனத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுளிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச் செய்
50. சேரிடம் அறிந்து சேர்
51. சை எனத் திரியேல்
52. சொல் சோர்வு படேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோன் எனத் திரி
55. தானம் அது விரும்பு
56. திருமாலுக்கு அடிமைசெய்
57. தீவினை அகற்று
58. துன்பத்திற்கு இடம் கொடேல்
59. தூக்கி வினைசெய்
60. தெய்வம் இகழேல்
61. தேசத்தோடு ஒத்துவாழ்
62. தையல் சொல் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

66. நாடு ஒப்பன செய்
67. நிலையில் பிரியேல்
68. நீர் விளையாடேல்
69. நுன்மை நுகரேல்
70. நூல்பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட ஒழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய உரையேல்
75. நோய்க்கு இடம் கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடுபெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
81. பூமி திருத்தி உண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதைமை அகற்று
84. பையலோடு இணங்கேல்
85. பொருள்தனைப் போற்றிவாழ்
86. போர்த் தொழில் புரியேல்
87. மனம்தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடம் கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

92. மூர்க்கரோடு இணங்கேல்
93. மெல்லில் நல்லாள் தோள்சேர்
94. மேன்மக்கள் சொல்கேள்
95. மைவிழியார் மனை அகல்
96. மொழிவது அற மொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடு பெற நில்
102. உத்தமனாய் இரு
103. ஊருடன் கூடி வாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினை செயேல்
106. வைகறைத் துயில் எழு
107. ஒன்னாரைத் தேறேல்
108. ஓரம் சொல்லேல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் புதிய ஆத்திசூடி

காப்பு— பரம்பொருள் வாழ்த்து

ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து,
மோனத் திருக்கும்முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

நூல்

1. அச்சம் தவிர்
2. ஆண்மை தவறேல்
3. இளைத்தல் இகழ்ச்சி
4. ஈகை திறன்
5. உடலினை உறுதிசெய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. ஊண் மிக விரும்பு
7. எண்ணுவது உயர்வு
8. ஏறுபோல் நட
9. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓய்தல் ஒழி
12 ஔடதம் குறை
13. கற்றது ஒழுகு
14. காலம் அழியேல்
15. கிளைபல தாங்கேல்
16. கீழோர்க்கு அஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்து நில்
18. கூடித் தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலும் துணிந்து நில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையை எதிர்த்து நில்
23. கோல்கைக் கொண்டு வாழ்
24. கவ்வியதை விடேல்
25. சரித்திரத் தேர்ச்சிகொள்
26. சாவதற்கு அஞ்சேல்
27. சிதையா நெஞ்சு கொள்
28. சீறுவோர்ச் சீறு
29. சுமையினுக்கு இளைத்திடேல்
30. சூரரைப் போற்று
31. செய்வது துணிந்து செய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

32. சேர்க்கை அழியேல்
33. சைகையில் பொருளுணர்
34. சொல்வது தெளிந்து சொல்
35. சோதிடந்தனை இகழ்
36. சௌரியம் தவறேல்
37. ஞமலிபோல் வாழேல்
38. ஞாயிறு போற்று
39. ஞிமிறென இன்புறு
40. ஞெகிழ்வது அருளின்
41. ஞேயம் காத்தல் செய்
42. தன்மை இழவேல்
43. தாழ்ந்து நடவேல்
44. திருவினை வென்றுவாழ்
45. தீயோர்க்கு அஞ்சேல்
46. துன்பம் மறந்திடு
47. தூற்றுதல் ஒழி
48. தெய்வம் நீ என்று உணர்
49. தேசத்தைக் காத்தல் செய்
50. தையலை உயர்வு செய்
51. தொன்மைக்கு அஞ்சேல்
52. தோல்வியில் கலங்கேல்
53. தவத்தினை நிதம்புரி
54. நன்று கருது
5.5 நாளெல்லாம் வினை செய்
56. நினைப்பது முடியும்
57. நீதிநூல் பயில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

58. நுனியளவு செல்
59. நூலினைப் பகுத்துணர்
60. நெற்றி சுருக்கிடேல்
61. நேர்படப் பேசு
62. நையப் புடை
63. நொந்தது சாகும்
64. நோற்பது கைவிடேல்
65. பணத்தினைப் பெருக்கு
66. பாட்டினில் அன்பு செய்
67. பிணத்தினைப் போற்றேல்
68. பீழைக்கு இடம் கொடேல்
69. புதியன விரும்பு
70. பூமி இழந்திடேல்
71. பெரிதினும் பெரிது கொள்
72. பேய்களுக்கு அஞ்சேல்
73. பொய்ம்மை இகழ்
74. போர்த்தொழில் பழகு
75. மந்திரம் வலிமை
76. மானம் போற்று
77. மிடிமையில் அழிந்திடேல்
78. மீளுமாறு உணர்ந்து கொள்
79. முனையிலே முகத்து நில்
80. மூப்பினுக்கு இடங்கொடேல்
81. மெல்லத் தெரிந்து சொல்
82. மேழி போற்று
83. மொய்ம்புறத் தவம் செய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

84. மோனம் போற்று
85. மௌட்டியந்தனைக் கொல்
86. யவனர்போல் முயற்சிகொள்
87. யாவரையும் மதித்து வாழ்
88. யௌவனம் காத்தல் செய்
89. ரஸத்திலே தேர்ச்சி கொள்
90. ராஜஸம் பயில்
91. ரீதி தவறேல்
92. ருசிபல வென்றுணர்
93. ரூபம் செம்மை செய்
94. ரேகையில் கனிகொள்
95. ரோதனம் தவிர்
96. ரௌத்திரம் பழகு
97. லவம்பல வெள்ளமாம்
98. லாகவம் பயிற்சி செய்
99. லீலை இவ்வுலகு
100. உறுத்தரை இகழ்
101. உலோக நூல் கற்றுணர்
102. லௌகிகம் ஆற்று
103. வருவதை மகிழ்ந்துண்
104. வானநூல் பயிற்சிகொள்
105. விதையினைத் தெரிந்திடு
106. வீரியம் பெருக்கு
107. வெடிப்புறப் பேசு
108. வேதம் புதுமை செய்
109. வையத் தலைமை கொள்
110. வௌவுதல் நீக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதிதாசனார் ஆத்திசூடி

1. அனைவரும் உறவினர்
2. ஆட்சியைப் பொதுமைசெய்
3. இசைமொழி மேலதே
4. ஈதல் இன்பம்
5. உடைமை பொதுவே
6. ஊன்றுளம் ஊறும்
7. எழுது புதிய நூல்
8. ஏடு பெருக்கு
9. ஐந்தொழிற்கு இறை நீ
10. ஒற்றுமை அமைதி
11. ஓவியம் பயில்
12. ஔவியம் பெருநோய்
13. கல்லார் நலிவர்
14. காற்றினைத் தூய்மைசெய்
15. கிழிப்பொறி பெருக்கு
16. கீழ்மகன் உயர்வெனும்
17. குள்ள நினைவுதீர்
18. கூன்நடை பயிலேல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19. கெடு நினைவு அகற்று
20. கேட்டு விடையிறு
21. கைம்மை அகற்று
22. கொடுத்தோன் பறித்தோன்
23. கோன்ஆட்சி வீழ்த்து
24. சதுர்பிறர்க்கு உழைத்தல்
25. சாதல் இறுதி
26. சிறார் நலம்தேடு
27. சீர்பெறல் செயலால்
28. சுவைஉணர் திறங்கொள்
29. சூழ்நிலை நோக்கு
30. செல்வம் நுண்ணறிவாம்
31. சேய்மை மாற்று
32. சைகையோடு ஆடல்சேர்
33. சொற்பெருக்கு ஆற்றல் கொள்
34. சோர்வு நீக்கு
35. தளையினைக் களைந்துவாழ்
36. தாழ்வு அடிமை நிலை
37. திருஎனல் உழுபயன்
38. தீங்கனி வகைவிளை
39. துன்பம் இன்பத்தின் வேர்
40. தூய நீராடு
41. தெருவெல்லாம் மரம் வளர்
42. தேன்எனப் பாடு
43. தைச்க இனிது உரை
44. தொன்மை மாற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

45. தோல்வி ஊக்கம்தரும்
46. நடுங்கல் அறியாமை
47. நால்வகைப் பிறவிபொய்
48. நினைவினில் தெளிவுகொள்
49. நீணிலம் உன் இல்லம்
50. நுண்ணிதின் உண்மை தேர்
51. நூலும் புளுகும்
52. நெடுவான் உலவு
53. நேர்பயில் ஆழ்கடல்
54. நைந்தார்க்கு உதவிசெய்
55. நொடிதோறும் புதுமைதேர்
56. நோய் தீயொழுக்கம்
57. பல்கலை நிறுவு
58. பார்ப்பு பொதுப்பகை
59. பிஞ்சு பழாது
60. பீடு தன்மானம்
61. புதுச்சுவை உணவுகாண்
62. பூப்பின் மணங்கொள்
63. பெண்ணொடு ஆண் நிகர்
64. பேயிலை மதமலால்
65. பைந்தமிழ் முதல்மொழி
66. பொழுதென இரவுகாண்
67. போர்த்தொழில் பழகு
68. மறைஎனல் சூழ்ச்சி
69. மாறுவது இயற்கை
70. மிதியடியோடு நட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

71. மீச்செலவு தவிர்
72. முகச்சரக்காய் வாழ்
73. மூப்பினுக்கு இடம்கொடேல்
74. மெய்க்கழிவு அயற்கின்னா
75. மேலை உன்பெயர் பொறி
76. மையம் பாய்தல் தீர்
77. மொடுமாற்றுப் பொது இன்னா
78. மோத்தலில் கூர்மை கொள்
79. வறுமை ஏமாப்பு
80. வாழாட்கு வாழ்வு சேர்
81. விடுதலை உயிர்க்குயிர்
82. வீடு எனல் சாதல்
83. வெறும் பேச்சுப் பேசேல்
84. வேளையோடு ஆர உண்
85. வையம் வாழ வாழ்

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
7325

"FORWARDED FREE OF COST
AND WITH THE COMPLIMENTS OF
THE Dept OF Edn. Govt. OF INDIA
NEW DELHI"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Accession
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேயோன் படைப்புக்கள்

1. தாலாட்ட மறந்த
   தமிழ்க்கவிஞன் — கட்டுரைத் தொகுப்பு நூல்
2. இளமையின் குரல் ,,
3. புலமைப் புறா ,,
4. காவியமும் ஓவியமும் ,,
5. மனத்தை உழுத மகான் ,,
6. அம்மா எப்ப நீ
   பாட்டியாவ ? — நாடகத் தொகுப்பு நூல்
7. திருவள்ளுவர் ஆத்திசூடி — மூலமும் உரையும்

முரளி பதிப்பகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar